உ

ஜோதிமயம்.

# இரஞ்சித போதினி

**கதை, காவ்யம், சரித்திரம், நவீனம், புராணம், இதிகாசம், அனுபவ முதலிய விஷயங்களைப் புனைந்துகொண்டு வெளிவரும் ஓர் மாதந்தரத் தமிழ்ப் பத்திரிகை.**

"தொட்டனைத் தூறு மணற்கேணி, மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு." (திருவள்ளுவர்.)

ஆசிரியர் :—தமிழ்ப்பூஷணம் ஸ்ரீ வாசுதேவ ராவ் கேய்க்வார்


| | | |
|---|---|---|
| தொகுதி 2 | இரக்தாக்ஷி௵ ஐப்பசி௴<br>1924௵ அக்டோபர்௴ | பகுதி 9 |


## கடவுள் வணக்கம்.

விடையவா வாரகஞ் சொருபவா வாரக
　　மெனப்பகர் விதங்க ளாகி
விரிமலக் கங்குலுயிர் விடயஞா னத்தினொடு
　　மிகுசொருப ஞானத் தையுந்
தடையதா கச்செய்த தனுவாதி நாலையுந்
　　தருமாயை யறிவி னாலுந்
தண்ணருட் பேரறிவி னாலுமத் தடைவிடுந்
　　தகுப ரையை யஞ்சலிப்பாம்
அடவினோ டெழுமவுண ருடல்வேறு கூறுபட
　　வலகைவே தாளபூத
மாடப் பெருங்கூகை கூவப் பருந்துகிழ
　　னீடச் செவந்த வடிவே
னொடியிலே வியகுகனை நெடியமான் மருகனை
　　நிகரில்போ ரூர்மு ருகனை
துணியகூ றறிவுகொடு கருதுவோ ரமுதமென
　　நுவலுமோ ரருள்பு ரியவே,

# இரஞ்சித போதினி

இரக்தாக்ஷி௵ ஐப்பசி௴ 1924௵ அக்டோபர்௴


## ஸ்வயராஜ்யத்தின் சூக்ஷ்மம்

## III

### (ஆ) நாட்டுக் கைத்தொழில்.

தற்காலம் நமது நாடு க்ஷீணமடைந்து நமக்கு மிகுந்த துன்பமும் தரித்திரமும் ஏற்பட்டதற்குக் காரணம் என்னவெனச் சிறிது ஆலோசிப்போமாயின் அது இன்னதென நமக்கு விளங்காமற் போகாது. முக்கியமாய் நம் நாடு தன்னால் சுயமாய் சித்தப்படுத்திக் கொள்ளக்கூடியதான கைத்தொழில் முறைகளைக் கைவிட்டு பிறநாட்டை எதிர்பார்ப்பதேயாகும். நம் நாட்டுக்கு வேண்டியவற்றை நாமே தயாரித்துக் கொள்ளக்கூடிய சக்தியும் உபகரணங்களு மிருந்தும் சோம்பலின் வயப்பட்டவர்களாகி நம் நாட்டுப் பொருள்களை பிற நாட்டாருக்கு சுவல்பவிலைக்குக் கொடுத்து அதனையே மீண்டும் ஒன்றுக்கு நூறு வீதம் அதிகம் கொடுத்துப் பெறுகின்றோமென்றால் அது நமக்கு அவமானமாயிருக்கவில்லையா? இதை எந்த தேசாபிமானி கவனித்தார்? மேடைமேலேறிப் பேசும்போது பிறருடைய மனம் உருகிப் பரவசப்படும்படி பேசிவிட்டு காரியத்தில் சூனியமாயிருப்பது நம் தேசத்தைச் சூனியமாக்கிவிடுமென்று அறியாமை அறியாமையே யன்றோ? நமது நாட்டு செல்வம் பிறநாடுகளில் போய் குவிந்துபோகின்றதோடு நமது நாடு செல்வமிழந்து வெறும் ஓடுபோ லாகிவிடுகின்றதென்றும் அறிந்து நம் நாட்டுக் கைத்தொழில்களை விருத்திசெய்வதற்கு முயற்சிப்பார் உளரா? தொழிலபிவிருத்தி செய்வதற்காக ஒற்றுமைப்படா மாந்தர் ஒருசமயம் ஒற்றுமைப்பட்டு ஒரு தொழிற்சாலையை ஸ்தாபிக்க நேர்ந்தாலும், அது கைகூடாமலும், ஒருசமயம் கூடிவரினும் 'வெண்ணெய் திரண்டுவரும் சமயம் தாழியுடைவது' போலக் கெட்டுப்போன தெத்தனையோ? தேசபக்தர்களே! ஸ்வயராஜ்யம் கோருபவர்களே.! ஸ்வதந்தரப் பிரிடர்களே! மஹாத்மா காந்தியடிகளின் பொன்மொழியாகிய 'தன் கையே தனக்குதவி' யென்னும் உண்மையை யுணர்ந்து நம் நாட்டுக் கைத்தொழில்களை யபிவிருத்திசெய்ய முன்வருவீர்களாயின்—நமது நாட்டுக் கல்வி யபிவிருத்தி யெய்துமாயின்—நமக்கு ஸ்வதந்தரம் கட்டாயமாய்க் கிடைக்குமன்றோ?

நமது நாட்டில் நம்மவர்கள் விருத்தியெய்தாது நம் நாட்டுக் கைத்தொழில்கள் க்ஷீணமடைவதற்குக் காரணம் ஒருவன் செய்யும் தொழிலையே பலரும் பின்பற்றியதன் பெருமையைக் கெடுத்து அதனுல் தாமும் கெட்டுப் பிறரையும் வாழமுடியாமற் செய்துவிடுகின்றனர். இது மிகவும் விசனிக்கத் தக்க காரியம்.

நமக்கு வேண்டும் சகல வஸ்துக்களையும் நாமே செய்துக் கொள்வதைவிட்டு நம் நாட்டுப்பொருளைப் பிறருக்கு ஸ்வல்ப விலைக்குக்கொடுத்து மீண்டும் அதையே அதிகவிலைகொடுத்துப்பெறுவதையொழித்து நம் நாட்டிலேயே யதைச் சீர்ப்படுத்தி ஸ்வல்ப லாபத்திற்கு விற்று நம் நாட்டு செல்வத்தை நாம் விருத்திப்படுத்தினுலன்றி நமக்கு ஸ்வதந்தரம் எங்ஙனம் கிட்டும்? ஆனுல் இதில் ஒரு சங்கடமிருக்கின்றதென்பதைமட்டும் நாம் ஒத்துக்கொள்ளுவோம். அதாவது நாம் ஒரு கைத்தொழிலையோ அல்லது வேறு எதையோ செய்யமுற்படுவோமாயின் அதினிடையே நம்மையாளும் அரசாங்கத்தார் புகுந்து அதற்கென ஒருசட்டத்தைத் தயாரித்து அதிகச்சுமையான வரியை விதித்து அத்தொழில் தலையெடாவண்ணம் நசுக்கிவிடுகின்றனர். இதற்காக நாம் அவர்களிடம் நியாயமாய் போராடவேண்டியதுதான். ஆனுல் இக்குற்றம் அவர்களால் ஏற்படுகின்றதாவெனச் சிறிது ஊன்றிப் பார்ப்போமாயின் அதுவும் நம்மவர்களில் ஒரு சாரா ராலேயே நடைபெறுகின்றதென்பது திண்ணம்.

எது எங்ஙனமாயினும் இனி நமது வருங்காலத்தின் லக்ஷயத்தை யநுசரித்து நமது நாட்டுக் கைத்தொழில்களை நாம் அபிவிருத்தி செய்து நமது நாட்டினை முன்னேறச்செய்வோமாயின் நமக்குவேண்டியதான—நாம் வேண்டுவதான—பிறப்புரிமையாகிய ஸ்வதந்தரம் நமக்குத் தானே வந்தெய்தும்.

### (இ) வழக்குகளும் நீதிஸ்தலங்களும்!

நாம் அடைய வேண்டுவதான ஸ்வதந்தரத்திற்கும் ஸ்வராஜ்யத்திற்கும் பெருந்தடையாயுள்ளது நம்மவர்களுக்குள் ஒற்றுமையின்மையே காரணமாகின்றதென்பதை நாம் விவரிக்காவிடினும் அறியாதார் ஒருவருமிராரென்றே கூறத்தகும். ஒற்றுமையின்மை யெதனுலேற்பட்டதென்பதை யெவரேனும் பகுத்தறிந்தார்களாவெனின் இல்லையென்றும், அறிந்துளாரென்றுமே கூறத்தகும். முக்கியமாக தற்காலம் நம்மவர்கள் ஒருவர்க்கொருவர் விவாதப்பட்டு நீதிஸ்தலங்களுக்குச் சென்று தற்காலம் நியாயவாதிகளெனப் பொலியும் (Vakil) வகீல்களைக்கொண்டு தமது கக்ஷியைப் பிரதிகக்ஷியுடன் எதிர்வாதம்செய்து இதுவரை கெட்டுப்போனவர்கள் எவ்வளவு பேர் என்பதை இதுவரையில் கணக்கிட்டுப் பார்த்தால் நன்ருய் தெரியவரும். ஆகையினுல் நாம் நமக்கு வேண்டியதான ஸ்வதந்தரத்தைப்

பெறவேண்டிய தவஸ்யமானல் நாம் செய்யவேண்டுவது என்னை யெனின், இனி நாம் நீதிஸ்தலங்களுக்குச் செல்லாதிருக்க வேண்டும். இது கஷ்டசாத்தியமெனின், இன்னொரு காரியமாவது செய்ய முற்படவேண்டும். அதாவது என்னையெனின், மாந்தர்களுக்குள் மனஸ்தாபம் ஏற்படாமலிராது. ஏற்படுமென்பது சகஜமேயாகின் றமையினல், மனஸ்தாபம் ஏற்பட்டு நீதிஸ்தலம் போக நேரிடின் நீதிமன்றத்தில் செய்யவேண்டிய விஷயமனைத்தும் தேசபாஷையிலே யேயிருக்கவேண்டும். இதற்காகவேண்டி ஆங்கிலக்கல்விகற்ற நியாய வாதியை ஏற்படுத்தாமலும், நீதிபதியிடமும் ஆங்கில மொழியை யுபயோகியாமலும், ஒருக்கால் அவர்கள் ஆங்கில மொழியிலேயே பேசவும் மற்றவிஷயங்கள் செய்யவும்வேண்டுமென்று கோரினும் முடியாதென்றும், தேசபாஷையிலேயே சகலமும் நடைபெறவேண்டு மென்றும், நியாயவாதியை ஏற்படுத்தமுடியாதென்றும்கூறவேண்டும் நியாயவாதிகளை ஏற்படுத்துவதால் 'கோதிபுண்டு பிரமாண்டம்' என் னும் ஆந்திரபழமொழிப் (குரங்குபுண் பெரியது) படி நம்மால் ஆரம் பிக்கப்படும் வியாச்சியம் சிறியதாயினும் நியாயவாதிகளால் பிரமாதப் பட்டு 'மண்டையுள்ளமட்டும் சளிபோகாது' என்பதொப்ப இவர் கள் வாழ்நாள்முழுதும் தீராப்பகை யுடையவர்களாய் உள்ள பொரு ளுமிழந்து கடனும் வாங்கி அதிலும் மிகுந்த துன்பத்தையடைந்து இருந்தயிடம் தெரியாமல் பறந்துபோனவர் எத்தனையோ? இத்த கைய விஷயங்களை அநுசரித்துதான் நாம் நீதிமன்றத்திற்கு போகப் படாது என்பதும், நமது ஸ்வதந்தரம் நிலைக்கவேண்டுமென்பதற்கும் நாம் சுயேச்சையாய் வாழ்வதற்கும் நமது நாடு வறுமை நீங்கி வாழ்வ தற்கும் நாம் நீதிஸ்தலங்களுக்குப் போகப்படாதென்பது அவஸ்யத் தினும் அவஸ்யம். நமது நாட்டின் செல்வம் நீதிஸ்தலங்களின் மூலம் அளவுகடந்து செலவாகின்றதென்பதைச் சிந்தித்துப்பார்த்து நீதிஸ்தலங்களுக்குச் செல்வாமல் பஞ்சாயத்தார் மூலமாய் தீர்த்துக் கொள்வார்களாயின் நமக்கு ஸ்வதந்தரம் சுலபமாய்க்கிட்டும்.

### (ஈ) ஒற்றுமை.

நமது ஸ்வதந்திரத்தின் அடிப்படையாவதும், நாம் ஒன்று பட்டு வாழ்வதற்கு ஆதார பூதமானதும் ஒற்றுமையென்றே கூற வேண்டும். ஆனல் தற்காலம் ஒற்றுமையென்பது நம்மவர்களிடை யில் குதிரைக்கொம்பாய் விளங்குகின்றது. உலகத்தில் சாதாரண மாய் அயல் வாழ்ந்தால் ஐந்துநாள்பட்டினி என்பதொப்ப ஒருவன் சுகமாய் வாழ்வதை நோக்கி மற்றவன் திருப்தியடையாமல் அவனும் வாழ்வதா? நாமும் பார்ப்பதா? என்று துவேஷம் கொண்டு தானும் வாழாமல் அயலானையும் வாழவிடாமல் கெட்டுப்போகப் பந்தயங் கட்டிக்கொள்பவர் பலரிருக்கும்வரை—அவ்வித துவேஷபுத்தியிருக் கும்வரை நமக்கு ஸ்வதந்தரம் எப்படி ஏற்படும். நாம் செய்யவேண்டு

வது முயற்சி. அது தெய்வத்தாலும் முடிக்கப்படா தொன்றை முடித்துவிடக்கூடியதென்று ஆன்றோர்கள் அபிப்பிராயங் கூறியிருக்கின்றனர். ஆதலினல் நாம் ஒவ்வொருவருடனும் ஒருமனப்பட்டு வாழ்ந்து வருவதுடன் ஒருவன்செய்யும் அடாத காரியத்தைக்கண்டு அவன்மீது பகைகொள்ளாமல் அவனைக்கடிந்து அவ்விதம் செய்யாதிருக்க அவனுக்குப் பலவகையாலும் நற்புத்தி புகட்டவேண்டும். அவ்விதம் நாம் செய்யத்தொடங்கி தனித்தனியானதும் ஒருவன் செய்யாததுமான பிரத்தியேகமான தொழில்களைச் செய்து தொழிலாளிகளுக்கும் பூரணதிருப்தியேற்படும்படி நடந்துகொள்ளுவோமாயின் அப்போதுதான் நம்மவர்களுக்குள் ஒற்றுமையென்பது ஏற்படும்; இதுவரை மேடைமீதுநின்று உபந்யாசம் புரிந்தவர்கள் ஒற்றுமையை நிலைநாட்டினார்களா ? ஏன் அவ்வாறு செய்யவில்லை? தலைவர்களுக்குள்ளேயே துவேஷமும் அதன் காரணமாகப் பொறுமையும் மனத்தாங்கலும், கணக்குவழக்கின்றி ஏற்பட்டு எவ்வளவு தொல்லைக்குட்பட்டிருக்கின்றனர். இதனல் நமது லக்ஷ்யம் எவ்வளவுதூரம் விருத்திக்கு வராமல் ஒழிந்து பாழ்பட்டிருக்கின்றது. இது ஒற்றுமையர்குமா ? தேசபக்தர்களாகவும், ஸ்வதந்தரம் வேண்டுபவர்களுமாகிய நாம் எல்லாரும் ஒருமனப்பட்டு வாழ்ந்தாவன்றோ ஒற்றுமையேற்படும். முக்கியமாய் நம்நாடு தற்காலமிருக்கும் நிலைமைக்கு நம்மவர்கள் ஒற்றுமையின் வயப்பட்டு வாழவியலாதாயின் நாம் ஸ்வதந்தரம் என்னும் ஒப்பற்ற வஸ்துவையடைய முடியாதென்பது திண்ணம்.

நண்பர்களே ! இனியேனும் நாம் நமது நாட்டின் முன்னேற்றத்தைக்கருதி நம் நாட்டவருடன் பகைகொள்ளாது சகல விஷயத்திலும் ஒற்றுமைப்பட்டு வாழத் துணிவோமாயின் நமக்கு ஸ்வதந்தரம் ஸ்வதந்தரமாகக்கிடைப்பதுடன் நிரந்தரமாகவே நிலையும் நிற்கும் இன்றேல் பூர்வத்தில் நம்மவர்கள் ஒற்றுமை யின்மையா யிருந்ததனலன்றோ நமது நாட்டு செல்வநிலையுங்குன்றி வறுமையின் வாய்ப்பட்டு அடிமைத்தனமாகவும் வாழ நேர்ந்துவிட்டது.

சகோதரர்களே ! நாம் பிறந்த இப்பரதகண்டத்தில் நமக்கு ஒரு பிடி மண்ணுக்குங்கூட அவகாசமின்றிச்செய்துக்கொண்டதெதனல் என்பதை சிந்தித்தீர்களா ? நமது மனையாளையும் மக்களையுங்கூட அதிகாரம் செய்யக்கூடாத கேவல நிலமை யேற்பட்டதெதனலென்பதை சிந்தித்தீர்களா ? நாம் ஏழையாய்ப்போனதற்கு காரணமென்னவென்பதனைச் சிந்தித்தீர்களா ? இவைகளுக்கெல்லாம் நாமே காரணமன்றி பிறர்மேற் கூறுவது தகாதென்பதே எமது முக்கியமான அபிப்பிராயம். அஃதெங்ஙனமெனின்,

(அ) நம்மவர்களுக்குள் ஒற்றுமைக் குறைவினல் நம்மவர்களை நாமே பகைக்கலாயினேம். அதோடு நில்லாமல் ஒருவர் வாழ்வைச்

சிதைக்கத் தக்க ஏற்பாட்டையும் செய்யலாயினேம். அவன் திர வியனுகவோ அல்லது வருவாயுடையவனுகவோ இருந்தால் நாம் அதைப்பற்றி பொருமைகொண்டு அரசாங்கத்தாருக் கறிவித்து அவ னுக்கு அதிக வரிச்சுமையை ஏற்படுத்தி விட்டோம். முக்கியமாய் நமது சொந்தக்காரியத்தைவிட்டு அயலார் காரியங்களைக் கவனித்து துவேஷமதியுடன் சோம்பலையும் யெய்தி நமது நன்மையையும் நமது சுகத்தையும் நாமே கெடுத்துக் கொண்டோம். இங்ஙனம் எதனுல் நேர்ந்தது? ஒற்றுமை யின்மையினுல் நேர்ந்ததெனின் வேறென்ன கூறவேண்டியதிருக்கிறது நாம் தற்சமயம் கொண்டுள்ள தான நோக் கம் சித்தியடைய வேண்டுமாயின் நாம் ஒருவரோடொருவர் பகை கொள்ளாமலும், நமக்கு ஒருவர் கெடுதி செய்யினும் அதை நாம் நிவர்த்தித்துக்கொண்டு அவனுக்குக்கெடுதி செய்யாமலும், சமயம் நேர்ந்து துர்ஜ்ஜன சகவாசத்தி லீடுபட்டவருக்கும் நன்மதி புகட்டி நம்மினும் தாழ்ந்தார்பால் நயம்பாராட்டியும் நவீன முறையை யநு சரித்தே நமது தேசமுன்னேற்றத்துக் குரியதான கைத்தொழில் களை யபிவிர்த்திசெய்தும், ஒற்றுமையுடன் வாழ்வோமாயின் நமக்கு வேண்டியதும் அத்யாவஸ்யமானது ஸ்வதந்தரத்தை நாம் எய்தி க்ஷேமமுறுவது திண்ணமேயாம். பத்திரிகாசிரியர்.

## இராமச்சந்திரன் காடேக்கிச் செல்வதைப்பற்றி ஆக்ஷேபனை சமாதானங்கள்

அல்லது

## பகவத் கீதோபதேசம்.

(292-ம் பக்கத் தொடர்ச்சி.)

நான் பிதாவுக்கு ஹிதத்தையே செய்யக் கடமைப்பட்டவன். நான் வனம்போகாமல் நின்றுல் பிதாவின் சத்யங் தவறும். அவர் சத்யந் தவறுதலினுல் நரகத்தையடைய நேரிடும். அவருடைய சத்ய விரதத்தை நிலைக்கப்பண்ணி, அவரை உத்தாரணம் பண்ணும் பொருட்டு நான் வனஞ்செல்ல வேண்டியது அவசியந்தான். நம் முடைய பூர்வீகர்களின் ரகுவம்சத்து ராஜாக்களின் தர்ம மார்க்க வொழுக்கங்களின் ஆசாரணைப்படி நானும் நடைபெறவேண்டியவ னுகை லின், நானும் வனஞ்செல்லவேண்டியது அவசியந்தான். பித்ருவாக் கிய நியமனப்படி யொழுகியவர்கள் எவரும் குறைவடைந்தாரில்லை. பித்ரு நியமனமே க்ஷேம ஹேதுவான நன்மார்க்கம்” என்று தம்பி லக்ஷ்மணனை நோக்கி, “அப்பா! உனக்கு என்மீதிலிருக்கும் நட்பை நான் அறிவேன்; நான் வனம்போவதைப்பற்றி நீ வருத்தமுறுதலும் தெரியும். நின் பராக்ரமும் எனக்குத் தெரியாமலிருக்கவில்லை. சத்ய

மார்க்கத்தையும், ஒழிவையும் அறியமாட்டாமல் என் மாதா அதிக கவலையுந் துக்கமுமடைகின்றனள். என்மேலுற்ற புத்ரவாஞ்சையால் அபலையான ஸ்திரீஜாதி கண்டபடி சொன்னாலும் சத்யம், தர்மம், க்ஷமை, புகழ் இவைகளைத் தெரிந்துகொண்ட நீயும் அவளுடன் சேர்ந்துகொண்டு பேசுதல் தகாது. தர்மார்த்த காமங்களை கிரகஸ்தன் தர்மமாயனுபவித்தல் வேண்டும். மோக்ஷத்தை யடையவேண்டியவன் சந்யாசி. தர்மமார்க்க ஆசரணையே கிரஹஸ்தனுக்கு முக்கிய தர்மம். சத்யம் தர்மஸ்வரூபமாய் விளங்கிக்கொண் டிருக்கின்றது. பிதாவின் அபிப்பிராய மெதுவோ அதைச் செய்வதாய் நான் கைகேயியின் முன்னிலையில் சபதம் பண்ணி யிருத்தலாலும், ரிஷிதுல்யமாய் தர்மானுஷ்டான ப்ரதமாம் பித்ரு நியமனத்தைக் கைக்கொண்டு அதன்வழியே யொழுகுதல் தர்ம மார்க்க மானதினாலும் நான் சத்யம் தர்மம் இவ்விரண்டையும் கைவிடாமல் பரிபாலிக்க வேண்டியவனா யிருத்தலாலும், பித்ரு நியமனப்படி நான் வனஞ் செல்லவேண்டுவது அவசியந்தான். தம்பி, லக்ஷ்மணா! நீமேலேகூறிய தனைத்தும் உலக வியற்கைக் குகந்த க்ஷத்திரிய தர்மமாகும். அவை நன்மார்க்கமாகமாட்டா, பொருளிச்சையால் அனுசரிக்கும்படியான க்ரூரமான துன்மார்க்க மெனப்படும். பிதாவை வெட்டுகின்றேன், கொல்லுகின்றேன் கட்டுகின்றேன் என்றமொழிந்த நின்மொழிகள் தகாதனவான துஷ்டபுத்தியா லுண்டானவை. அப்பா! அந்த துஷ்டபுத்தியை எட்டத் தள்ளிவிடுத்து நல்ல புத்தியை அடைய வேண்டும் நான் அனுசரித் தொழுகும்வண்ணம் சன்மார்க்கத்தைச் சார்ந்தொழுகவேண்டும்" என்று மாதாவை நோக்கி, "என் அம்ம! நான் வனம் போய்வர அனுமதி கொடுக்கவேண்டும். நான் வனம் போவதிலிருந்து நீர் என்னை சிறிதும் தடை செய்யக்கூடாது. என் பிராணன்மேல் சபதம் செய்கின்றேன். நான் வனம் போகத்தான் வேண்டும். நீங்களும் மகிழ்ந்து ஆசீர்வதித்தனுப்பவேண்டும். என் பிரதிக்ஞைப்படி வனவாஸ நியமத்தை பதினான்கு வருஷங்களிருந்து முடித்துக்கொண்டு மீண்டிவண்வந்து தங்கட்கியன்ற சிச்ருஷைகளைச் செய்கின்றேன். யயாதி ஸ்வர்க்கத்திலிருந்து பூவுலகம் வந்து மீண்டும் ஸ்வர்க்கஞ்சென்றவாறு நானும் பித்ரு நியமன வனவாஸத்தை முடித்துக்கொண்டு, பிறகு மாத்ரு நியமனப்படிக் குள்ளவற்றைச் செய்யும்பொருட்டாய் இவண் திரும்ப வருகின்றேன், நீர் கண்ணீர் சொரிதலழகன்று, என்னுடைய க்ஷேமகரமான மீட்சியைக்கருதி மங்களகரமா யாசீர்வதித் தனுப்பவேண்டும். மகாராஜாவானவர் பெரியவர்—குடும்பஜ்யேஷ்டர்—மகாராஜா—லோகநாதன் — ஆகையால், நான், நீர், லக்ஷ்மணன், சீதை, சுமித்திரை ஏனையோர் அவருடைய மனங்குளிரும்படி யொழுகி வரவேண்டுவதே தர்ம மார்க்கமாம். ஆகையால் நீர் தயவுபுரிந்து நான் வனம்போய் வரும்படி அனுக்ரகம்பண்ணி யனுப்பவேண்டும். அபிஷேக சம்பாரங்களையும்,

துக்கத்தையும் எட்டத் தள்ளிவிட்டு, துக்கமீறிவந்தாலும் மனதி லடக்கிக்கொண்டு என் க்ஷேமத்தைக்கருதி வெளிக்குக் காட்டாமல் மங்களமா யாசீர்வதித் தனுப்பும்படியாய் வேண்டிக்கொள்ள லாயி னேன்" என்றனர். புத்ரனுடைய பிதுர்வாக்கிய நியமனப்படிக் குள்ள மன உறுதியைக் கண்டுங் கேட்டும் மூர்ச்சையடைந்த கௌஸல்யா தேவியார், சைத்யோபசாரங்களினல் மனஞ் சற்றுத் தெளிந்து மறுபடி ராமச்சந்த்ரனை நோக்கிச் சொல்வாராயினர்.

"அடா, குழந்தாய்! ராமச்சந்த்ரா! பிதா எப்படி பூஜ்யரோ அப் படியே மாதாவும். ஆகையால் நீ என்னைத் தனியே இவண் விட்டு வனஞ்செல்ல நினைப்ப தழகல்ல. என்னையுங்கூட அழைத்துச்செல்ல வேண்டும். அப்பா! இல்லாமல் எனக்கென்ன பிழைப்பு வேண்டி யிருக்கின்றது. பர்த்ரு சிச்ருஷையினுல் ஸ்வர்க்கந்தானே கிடைக் கும். குணவானுன நின்னைவிட்டு எனக்கு ஆனந்தமில்லை யாதலால், ஸ்வர்க்க சுகம் வேண்டாம், நானும் நின்கூட வனம்நோக்கிவந்தாலே போதுமான ஆனந்தமேயாம்" என்று வற்புறுத்திக்கூறும் மாதாவை நோக்கி, பகவான் ராமச்சந்த்ரன் தர்மோபதேசம் பண்ணியும் இணங்கி விடையளிக்காமல் மறுக்கின்றனளே என்று சிறிது முனிந் து அன்னையாரையும், தபிக்கும்படியான தம்பி லக்ஷ்மணனையும் பார்த்து மீண்டும் தர்மோபதேசஞ் செய்யலாயினர்.

(தொடரும்)

துறையூர் மா. சுப்பராமய்யர்.

## நட்பு.

நட்பு என்பதற்கு வேற்றுமையின்றிப் பொருந்துதல், என்று பொருள். நட்பு, கேண்மை, நேசம், சிநேகம் இவை எல்லாம் ஒரே சொற்களாகும். மாந்தர்கள் எப்போதும் தங்கள் இனத்தா ருடைய கூட்டுறவை விரும்பும் இயல்புடையவர்கள். மனிதர்கள் ஒருவரோடு ஒருவர் கூடிவாழ்தல் இயற்கையேயாம். ஆயினும் நட் பிலா வாழ்க்கை ஒரு வாழ்க்கையாகாது.

நட்பினர் என்று எல்லோரையும் கூறிவிடுதல் கூடாது. சிலர் நம்கையில் பணம் இருக்கும் வரையில் நட்பாயிருந்து நம் கைப்பொ ருள் சிலவாய்விட்டால் நம்மைவிட்டு நீங்கும் நண்பர்கள் நண்பவர் களாவார்களா? சிலர் நம்மால் அவர்களுக்கு ஏதேனும் காரியம் ஆக வேண்டியவரை நட்பாயிருந்து காரியம் முடிந்துவிட்டால் நம்மை விட்டுப்பிரிந்து போகும் நண்பர்கள் நண்பர்களாக மாட்டார்கள்.

சில துஷ்டர்கள் கபடமறியாத ஓர் வெகுளியை தன் சிநேகன் என்று எண்ணுமாறு அவ்வளவு நம்பிக்கையாய் நடந்து கடைசியில்

அவ்வெகுளியை அதிகமான பணநஷ்டத்திற்கும் மனக்கஷ்டத்திற்கும் மானநஷ்டத்திற்கும் உள்ளாக்குவதோடு மல்லாமல் கொலையும் செய்து விடுகிறார்கள். அந்தோ! இவ்வாறு மோசம் போகும் நம் நேயர்களில் எத்தனையோ பெயரை நம் கண்ணாரப் பார்க்கின்றோம். ஆகையால் இவ்வித கபடநேசர்களை நாம் ஒருபோதும் நம்பலாகாது அக்கபட வேஷக்காரர்கள் நம்மிடத்தில் எவ்வளவு வெளிமோச மரியாதையுடன் இருக்கிறார்களோ அப்படியே நாமும் அவர்களிடம் வெளிவேஷத்திற்காக மாத்திரம் நட்பினன் போலிருத்தல்வேண்டும்.

நல்லோருடைய சினேகம் திடீரென்று உண்டாகி திடீரென்று மறைந்துவிடும். நாம் ஒரு போக்கிரியுடன் சகவாசம் வைத்துக் கொண்டால் நம்மை ஒருவரும் மதிக்காவண்ணம் அச்சினேகம் செய்துவிடும்.

கெட்டவர்கள் மனதிலொன்றை வைத்துக்கொண்டு வாக்கில் வெகு நயமாய் பேசுவார்கள்.

"மனஸ்ஸன்யத் வசஸ்ஸன்யத் கார்யமன்யத் துராத்மனும்"

இப்பேர்பட்ட தீயரை நாம் ஒருநாளும் அண்டவே கூடாது. நல்லோருடைய சினேகம் ஒரு கருப்பங் கழியை நுனியிலிருந்து அடிவரை தின்னுவது போலுமாகும். தவிர எப்போதும் அறிவுடைய பெரியோரோடேயே பழகல்வேண்டும். அறிவுடையோர் நேசம் பிறை வளர்வது போலும். தீயோருடைய சினேகம் முழு மதிக்குப்பின் சந்திரன்போலும் தேயும்.

"நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்பின்
னீரப் பேதையார் நட்பு"

எப்போதும் நம்மோடு பழகும் ஒருவரோடு பல நாள் பழகி அவர் குணத்தை நன்கறிந்த பின்பே நட்பு செய்யவேண்டும்.

உலகத்திலுள்ள மாந்தர்களில் குற்றமில்லாதார்களே அறிது அதிலும் மேலோர்களும் ஒரோர் சமயம் குற்றம் செய்ய நேரிடும். பலவுதவிகள் செய்து நட்பாயிருக்கும் சிநேகர் ஒருசமயம் குற்றம் செய்ய நேர்ந்துவிட்டால் அக்குற்றத்தை நாம் ஒரு பொருட்டாக எண்ணாது அதைமாற்றி நல்வழிக்குக் கொண்டுவர முயலவேண்டும்.

துன்மார்க்கமுள்ளோரோடு பழகும் நாம் அவர்களுக்கு அநேக உதவிகள் செய்தும் எப்போதாவது ஒரு சமயம் நாம் ஒரு குற்றம் செய்துவிட்டால் முன்செய்த நன்மைகளை எல்லாம் மறந்து குற்றத்தையே பிரதானமாகக்கொண்டு நமக்குத் தீமைசெய்ய நினைப்பார்கள். அவர்களோடு ஒருபோதும் நாம் சினேகம் செய்யவே கூடாது. அப்பேர்பட்ட சினேகத்தை விட்டுவிட முயலவேண்டும்.

நட்பினர்களுக்குள் ஒருவருக்குத் துன்பம் நேர்ந்த காலத்தில் அத்துன்பம் நமக்கே நேர்ந்ததாகப் பாவித்து அவரைவிட்டுப் பிரியாமல் கூடவிருந்து அத்துன்பத்தை நீக்க முயன்று அதனால் உயிரிழக்க நேரிடினும் உயிர் விடுவரே உண்மையுள்ள நண்பர்களாவார்.

"நல்வினைக்க மல்ல தல்லற் படுத்தும்"

"நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார்சொல் கேட்பதுவும் நன்றே—நல்லார்
குணங்க ளுரைப்பதுவும் நன்றே அவரோ
டிணங்கி யிருப்பதுவும் நன்று"

என்னும் மூதுரை வாக்கியமும் இதுபற்றியே. ஸாது ஸங்கத்தினல் மோக்ஷசாதனமும் கிட்டும் என்று ஸ்ரீ சங்கரபகவத்பாதாசாரியாளும் தமது பஜகோவிந்த ஸ்தோத்திரத்தில்:—

"ஸத்ஸங்கத்வே நிஸ்ஸங்கத்வம், நிஸ்ஸங்க்வே நிர்மோஹக்வம்,
நிர்மோஹத்வே நிச்சலதத்வம் நிச்சலதத்வே ஜீவன்முக்திஹி"

என்று கூறியிருக்கின்றனர்.

"ஹிதோபதேசி"

உ

சிவகணபதிதுணே.

## ஸ்ரீ பழனியாண்டவர் திருவருட் பாசுர அந்தாதி.

1. உண்ணு முலையுமை யோடுட னேங்கலுறை சிவன்பாற்
பண்ணு ரும்வீணை முனிபோந் தளித்த பலக்கருதி
நண்ணு தவனி யெழுந்து சிவகிரி நண்ணுகுகன்
றண்ணு ரந்தாதி சொலவரு ளாணையின் றுட்டுணையே.

2. துணையே யெனுமோர் துரிய விளைவைச் சுமந்தளிக்கும்
புணையே யெனவரு ளானந்த சண்முகற் பொற்பதத்திற்
கிணையே யெனவென் னிருதய மாமலர் ஏற்றிடவே
அணையே யெனவுனு மன்பணைக் குற்றவா றுண்டருளே.

3. அருளே பொருளென் றறியா திருமாந் தவனியிடை
மருளே பெறுவார் மதியின் வலியை மறித்தொருக்காற்
றெருளே கிவமெனச் செப்பியுங் கேளாச் செவிட்ருடன்
இருளே கதியா யிணங்கா வகையரு ளெம்மிறையே.

4. இறையே யுனையே யிரவா திரந்தும் இனியசுகம்
நிறையே யருளாய் நிமல வடிவாம் நினதுபெரும்
மறையே கருதி மனத்தாற் செபிக்கும் மதியிலியைக்
குறையே கொளாது குணமே கொளவுங் குறித்திடுமே.

5. குறித்திடு வாயெனக் கொள்கல மாமுனைக் கோதிலதாய்
வெறித்திடு மாமது வென்றே விழுங்கும் விமலருக்குப்
பறித்திடு பாக்கியம் பண்புற வேதரும் பண்ணவன்பின்
மறித்திடு வாயென மாமதி நீயும் மதித்திடலே.

6. மதித்திட நின்னை மதியார் மதிதனை மண்ணுலகிற்
கதித்திடச் செய்யுங் கரும வினையைக் கழித்திடவே
விதித்திட மாமல ரோன்செயல் வீணெனும் வீம்பருணைத்
துதித்திடக் காணுந் துயரல தேது சுகமுளவே,

7. சுகமுள வேதன் துரிய நிறைவாஞ் சுடர்ப்பொருளை
அகமுள நாதனருளெனக் காணு தகங்கரித்துச்
சகமுள பாலன் றரமென நேர்ந்த தகவறிந்து
நகமுள வான்சிறை நாட்டு குகன்செயல் நாடறிவே.

8, காடறி யுங்குகன் கற்று மறைப்பதம் கண்ணிடவே
வீடறி யுங்கழல் வீரன தாண்மை வெளிப்படவே
பாடறி யும்பல பாட்டினைப் பாடிடப் பண்பறியும்
பீடறி யுஞ்சுகம் பேணிப் பிரபலப் பேறுறுமே.

9. பேறுறு மென்றே பிதற்றல் பிழையெனப் பிஞ்ஞகன்றன்
வீறுறு மன்பர் விளம்பும் விழுப்பொருள் வேதமென
ஆறுறு மாமுக னன்றம ராபதி யாண்டகையாற்
சாறுறு தன்மையைச் சாற்ற லுனக்குத் தரமுணரே.

10. தரமுண ரென்றே தடுத்துப் புகன்றும் சரணமெனப்
பரமுண ராமற் பரதவித் தேகிடும் பாழ்மனமே
திரமுண ராமற் செகமா மயலிற் றினந்தினமும்
வரமுணர் யோகரில் வாழ்ந்து மயங்கிடல் வாழ்வலவே.

11. வாழ்வல வென்றே வகுத்து வகுத்து வழங்கிடினும்
பாழ்பல செய்தே பணமது தேடப் பரதவிக்கும்
ஊழ்வல வென்றே யுணர்த்த வுணர்ந்தனன் உன்பதத்தே
தாழ்நல மென்றே தருவாய் தமியேன் றனிப்பொருளே.

(தொடரும்)

A. சிவசூரியம் பிள்ளை,
தமிழ்ப்பண்டிதர், ஆனைமலை.

## காலம்.

தேடப்படும் பொருளைச் சிக்கனமாகப் புதைத்துக் கோடிக்கொரு நிமிஷம் கொள்ளுகினும் கொள்ளக்கிடையாத அவ்வளவு அருமையும் பெருமையுமுடையது "ஜீவகாலம்". அதில் அறியாமையுள்ள குழந்தைப் பருவத்தையும் யாதுஞ்செய்ய ஏலாத முதிர்ந்த வயதையும் அகற்றினால் நின்றநாள் நாள் நாற்பது மிஞ்சினால் ஐம்பது வருஷ காலமாம். இதிலும் நித்திரைக்கும் வியாதிக்கும் நிவர்த்திக்க முடியாத பல தொந்தரைகளுக்கும் போவது போக மீதியாயிருக்கிற காலம் மிகவும் சொற்பகாலமாம். இந்தக் காலத்தில்தான் நாம் அடையவேண்டிய அனைத்தையும் அடைந்து செய்யவேண்டிய சகலத்தையும் செய்து முடிக்கவேண்டியதை முற்றும் முடிக்கவேண்டும்.

நாம் செய்யும் காரியங்களை உரிய காலத்தில் செய்வதால் அதிகமான பலனுண்டு 'காலத்தினாற்செய்த நன்றி சிறிதெனின், ஞாலத்தில் மாணப் பெரிது' என்பது குறள் வாக்கியம். காலம் நன்மையை தீமையாகவும், தீமையை நன்மையாகவும் ஆக்கவல்லது. காலமே வலியாரை மெலியாராக்கவும், மெலியாரை வலியாராக்கவும் மாற்ற வல்லது. 'நாள் செய்வதுபோல் நல்லோர் செய்யார்' 'காலத்திற்கேற்ற கோலம்' 'காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்' என்ற பழமொழிகளும் வழங்குகின்றன.

நீ எண்ணியிருக்கும் கருமங்களை முடிக்க ஒரு காலம் வந்து வாய்க்கும் அக்காலத்தையறிந்து இழந்துவிடாது அக்கணமே யுன் முயற்சியைக்காட்டி செய்தற்கரிய அருஞ்செயல்களைச் செய்துமுடித்துக்கொள் என்று

"எய்தற்கரிய வெய்தியக்கால் அந்நிலையே
செய்தற் கரிய செயல்" என்றுங் குறள் கூறுகிறது.

'இந்த சமயம் தப்பினால் இதுபோல் மற்றொரு சமயம் வாய்ப்பது அருமை'. இந்த சமயத்தை விட்டுவிடாதே யென்னும் கருத்தால் 'காலமும் கடலலையும் மனிதனுக்காகக் காத்திரா' என்பதோர் ஆங்கிலப் பழமொழியும் வழங்கி வருகிறது. ஆகவே காலம் என்பது நாம் போற்றத்தக்க எப்பொருளினும் சிறந்ததாகும். இதனை யறியாது பேதைமாந்தர் பலர் தம் வாழ்நாள் வீணாள்போக்கிப் பயவாதகளர் ஆகின்றனர்.

காலம் ஒரு அருவப்பொருளேயாயினும் அதனை யுபயோகித்துக்கொண்ட திறமையால் அறிஞர்கள் எவ்வளவு கீர்த்தியையும் ஐஸ்வர்யத்தையும் மற்றும் இம்மைக்கும் மறுமைக்கும்வேண்டிய பயன்களையும் அடைந்திருக்கின்றனர். இதனை அவ்வழியில் உபயோகித்துக்

கொண்டதனுலே அறிவிலிகள் தங்களை எவ்வளவு தீமைகளுக்கு உட்படுத்திக்கொண் டிருக்கின்றனர். அறிவிலி இந்த ஒரு பிறப்பிற்குள்ளேயே இனியடையவேண்டிய எழுபிறப்பிலும் அநுபவித்தற் குரிய நரகத்தைத் தேடிக்கொள்ள வல்லவனுவான் என நாயனுர் கூறியதும் இதுபற்றியேயாம்.

நமது வாழ்நாட்கள் வருஷம் என்னும் பெரும் பிரிவாலும், அது மாதம், நாள், நாழிகையென்னும் சிறு பிரிவாலும் பகுக்கப்பட்டிருக்கிறது நிற்க,

நாம் பல காரியங்களை முடிக்கவேண்டுமென்று ஆசைகொண்டு அனைத்தையும் ஆரம்பித்துவிடுகிறோம், முடிவைப் பார்த்தால் நாம் செய்தது சொற்பமா யிருப்பதுகண்டு மனவருத்த மடைகிறோம். இதை ஒவ்வொருவரும் அநுபவத்திலறியலாம். நம்கையி லிருப்பது நிகழ்காலம் இக்காலத்தை எவ்வளவு உபயோகமுள்ளதாய்க் கழிக்க முடியுமோ அவ்வளவு உபயோகமுள்ளதாய்க் கழிக்கவேண்டும்.

நாம் ஒரு காரியத்தை நாளை செய்யலாமென்று மனத்தைத் தேற்றிக்கொண்டு இன்று செய்யவேண்டிய காரியத்தை நாம் இப்பொழுதே செய்யவேண்டும். காரியம் எத்தகையதா யிருந்தாலுஞ் சரி, அதை நம் சக்திக்கு இயன்றவரை சரியாய்ச் செய்யவேண்டும். யாரொருவர் முன் அநுபவித்த சுகதுக்கத்தை நினைந்து வாழ்கிறரோ அவர் நிகழ்காலத்துக் குரியரல்லர். மேலும் இனி வரப்போவதை நினைந்து உற்சாகமோ வருத்தமோ கொள்கிறவரும் நிகழ்காலத்திற் குரியவரல்லர். இறந்தகாலத்தைப் பற்றியாவது வருங்காலத்தைப் பற்றியாவது சிந்திப்பதில் ஒருபயனுமில்லை. நிகழ் காலமே நம் காலம். இக்காலத்தில்தான் நாம்வாழவேண்டும், உழைக்கவேண்டும் நம் சக்திக்கியன்றதைச் செய்யவேண்டும். ஆகையால் இறந்தகாலத்தையாவது எதிர்காலத்தையாவது நினைந்து செய்யும் காரியத்தில் நம் சித்தைக் குறைவு செய்யாம லிருப்போமாக

K. R. கணபதி பிள்ளை, சுண்டக்காமுத்தூர்.

## இரஞ்சித போதினியின் வாழ்த்து

வெண்பா.

வண்மதியைப் போல்வந்து மாதந்தோறும் பாலர்
ஒண்மதியை யோங்குவிக்கும் ஊக்கமுள்ளாய்—கண்மணியே
ரஞ்சித போதினி! நீ பல்லாண்டு பல்லாண்டாய்
ஞாலமதில் வாழ்க நான்கு.

K. சாமிநாதன்,
ரத்தினவிலாசம், எட்டயபுரம.

## இரஞ்சித ரத்ன மாலா

### மலர் 6.

1. கெட்ட பழக்கங்கள் பிடிபடுவது சீக்கிரத்தில். அப்பழக்கம் உள்ளவர்களோடு 'நாம் அப்பழக்கத்தில் இறங்குவதில்லை' என்று பிரதிக்கினை செய்துகொண்டு பழகினுலும் அந்தப் பழக்கம் பிடிபட்டுப்போய் விடுகிறது. பின்னர் அதை ஒழிப்பதெனுல் சாமான்யத்தில் ஆகிற காரியமல்ல.

2. 'தன்னைப்போல் பிறரையும் நினை' என்ற நீதியைச் சிலர் ஒரு விதமாக அநுஷ்டிக்கிறார்கள். எப்படியெனில், திருடன் தன்னைப்போல் பிறரையும் எண்ணுகிறுன். வஞ்சகப்பேய்கள் மற்றவர்களையும் தன்னைப்போல் எண்ணுகிறார்கள். விபசாரி, உலகத்திலுள்ள பெண்கள் எல்லாருமே விபசாரி என்கிறுள். எப்படி? சரிதானே!

3. எங்கும் பஞ்சம் பஞ்சம் என்று கதறிக்கொண்டிருந்தாலும் இன்னும் காசை லக்ஷியம் செய்யாமல் ஸ்திரீ விஷயத்திலும், ஆடம்பரப் பைத்தியத்திலும் பட்டம் முதலியவைகளுக்காகவும் வாரிவாரி இறைக்கும் கர்ண மஹாராஜர்களும் இருக்கிறார்கள்.

4. பத்துநாளாக நம்முடன் பழகின புது நண்பர்கள் ஊரை விட்டுப்பிரிவதென்றுல் நமக்கு வருத்தமாய் இருக்கிறது. கண்ணில் ஜலம் வந்துவிடுகிறது. அநேக உபசார வார்த்தைகளுடன் 'அடிக்கடி கட்டாயம் கடிதம் போடுங்கள்' என்பதை அடிக்கடி அவர் புறப்படுவதற்குள் இருபது தடவை சொல்லிவிடுகிறோம். ஊருக்குப் போய்விடுமோ, அவருக்கு அவ்வளவாகக் கவலை இல்லை. நமக்கோ 'இவ்வளவு நாழிகையில் ஊரில் இருப்பார். நேற்று இதே வேளைக்கு இங்கு சாப்பிட்டார்' என்று அவரைப்பற்றி இரண்டுநாள் நினைப்பு வாரத்தில் இரண்டு கடிதம் போக்கு வரத்து. அடுத்தவாரம் ஒரு கடிதம், அடுத்தமாதம் ஒன்று, அடுத்த வருடம் ஒன்று போட்டாலும் போடுவார். இல்லாமலிருப்பதும் உண்டு. இதுதான் பாசம். உலக பாசமும் உலகத்தில் சம்பந்தப்பட்டவரையில்தான்.

5. கடன் கொடுத்தால் நல்லவன். கொடுத்ததைக் கேட்டால் கெட்டவன்.

6. தர்க்கமென்பது சந்தேகங்களுக்கு விடை.

7. தனது இரகஸ்யத்தைப் பிறரிடம் சொல்பவன் மூடன்.

8. பிறர் குற்றத்தைப்பற்றி அடிக்கடி பேசுபவன் எல்லோராலும் விரோதிக்கப்படுகிறுன்.

9. பணம் ஏறினுல் பட்டம் ஏறும்.

10. அநேக விஷயங்களில் தலையிடுகிறவன் இறுதியில் துன்பம் உறுகிறான்.

11. பெண்பிள்ளைகளை அடக்கிவைப்பது பெற்றோர் கடமை.

12. துஷ்டனைப் பகைக்கவும்கூடாது. சிநேகிக்கவும் கூடாது.

13. கற்றவர்க்குப் போனதைப்பற்றிய வருத்தம் தோன்றாது.

14. துக்கத்தையும் சுகத்தையும் சமமாகக் காண்பவன் ஞானி ஆவான்.

15. மாய அழுகை பெண்களுக்கோர் வாள்.

16. ஆராய்ச்சியே அறிவிற்குத் தூண்டுகோல்

17. நீந்தத் தெரியாதவனுக்கு ஒரு ஆளாழமே கூற்று. நீந்தத் தெரிந்தவனுக்கோ ஒரு ஆள் ஆழமும்சரி. இருபதாள் ஆழமும் சரி.

18. தூக்கமும், அடிக்கடி உண்பதும், சோம்பலும் மூதேவிக்கு நல்வரவு.

19 கோபம் உண்டாகும்போது மனைவியோ, குழந்தையோ எதிர்ப்படின் தணியும்.

20. பெரியவர்கள் தாங்கள் கொடுத்த வாக்கை நிறைவேற்ற மிகுந்த சிரமப்படுகிறார்கள். ஆனால் அற்பர்களோ! எல்லாருக்கும் 'அது கொடுக்கிறேன். இது செய்கிறேன்' என்று தாராளமாக வாயினால் கூறிவிட்டு எல்லாருக்கும் ஆசைகாட்டி ஏமாற்றுகிறார்கள்,

21. எல்லா விஷயங்களும் தெரிந்தவர்களும்கூட சிலசமயங்களில் ஏமாந்து போகிறார்கள்.

22. பக்கமாக இருக்கப்பட்டவர்கள்தான் விரோதியாகிறார்கள். எப்பொழுதும் அயல்வீடு எதிர்வீட்டுக்காரர்களுடன் சண்டைதான்.

23. கண்ணீர்விட்டால் ஏளனம் செய்பவன் அல்பன். அதைப் பார்த்துச் சும்மா இருப்பவன் அந்நியன். கண்ணீரைத் துடைப்பவன் சுற்றத்தான். தானும்கூட அழுபவன் உத்தம நண்பன்.

24. காலத்திற்கேற்ப புத்தியும் மாறுகிறது.

25. பிள்ளைகளைக் கெட்டவழியில் பழக்குவதைவிட அவர்களை கொன்றுவிடுவது மேல்.

26. அதிகச் சிரிப்பும், அதிக வருத்தமும் கூடாது.

27. உடற்பிணிக்கு மருந்துண்டு. உள்ளப்பிணிக்கு மருந்தில்லை.

கி. வா. ஜெகந்நாதன்,

ஸ்ரீ சந்திர விலாஸம், மோகனூர்.

## லீலாசுகர் சரித்திரம்.

ஸ்ரீ கிருஷ்ணகர்ணாமிர்தம்' என்ற அரிய கிரந்தகர்த்தாவாகிய லீலா சுகர் என்ற பெரியோரின் திவ்விய சரித்திரத்தைச் சொல்லப் புகுவோம்.

முன்னொரு காலத்தில் வில்வமங்களன் என்ற ஓர் பணக்கார ப்ராமணச் சிறுவன் இருந்தான். அவன் சைவமார்க்கத்தை அனுசரித்து சிவதீக்ஷையும் பெற்றிருந்தான். இவனுக்கு ஏராளமான திரவியமிருந்தது நாளடைவில் பல துஷ்டசிநேகிதர்களின் சகவாசத்தால் யௌவனகாலம் பரஸ்திரீகமனம் மதுபானம் முதலிய தீயவழியில் கழியலாயிற்று.

இப்படியிருக்க அவ்வூரில் சிந்தாமணி என்னும் ஓர் தாசி மிகவும் அழகுடையவளாய் இருக்கக்கண்ட வில்வமங்களன் அவள் மேல் மோஹித்து அவளிடம் சேர்ந்துவிட்டான். இவனுடைய தாய் தந்தையர்கள் எவ்வளவோ முயன்று இவனைத் திருப்பப் பார்த்தும் முடியாமல் மனம்வெறுத்து தகப்பனார் இறந்துவிட்டார். தாயும் தன் கண்களை இழந்தாள். தகப்பனாரின் ஈமக்கடன்களை முடிக்க வில்வமங்களனை அழைக்க அநேகர் முயன்றனர். எல்லாம் வியர்த்தமாயிற்று. அவனுக்கோ சிந்தாமணியைத்தவிற வேறு உலகம் இருப்பதாகவே தோற்றவில்லை. அப்பொழுது வேறு ஒரு வழியும் இல்லாதது கண்டு அவர்கள் நேரே சிந்தாமணியிடம் சென்று முறையிட்டனர் தாசிக்கு மனம் இளகிவிட்டது. உடனே தன் காதலனை தகப்பன் வீடு அனுப்புவதாய் வாக்களித்தாள். வில்வமங்களனிடம் வந்து தகப்பன் கிரியைகளைச் செய்துவிட்டு வருமாறு வேண்டினாள். அவன் இணங்கவில்லை தன்னால் எவ்வளவோ மன்றாடியும் அவன் கேட்காததால் அவனை அடித்துத் துரத்தினாள்.

பார்த்தான் வில்வமங்களன்! என்ன செய்வான் வேறுகதியில்லை தன்னுடைய வீடுசென்று செய்யவேண்டிய ஈமக்கடன்களை எல்லாம் செய்துவிட்டு வந்தால்தான் சிந்தாமணி தன்னை சேர்த்துக்கொள்வாள் என்று எண்ணி, உடனே தன் வீடுவந்து ஈமக்கடன்களை எல்லாம் செய்தான் வாய் மந்திரம் சொன்னபோதிலும் மனம் சிந்தாமணியை சிந்தித்து நின்றது. கடைசியில் கர்மங்களெல்லாம் செய்தொழிந்ததும் 'சட்டிசுட்டது கைவிட்டது' என்ற கதையாக சனி துலைந்தது என்று வில்வமங்களன் காதலால் தூண்டப்பட்டு சிந்தாமணி வீட்டைநோக்கி புறப்பட்டான். அன்று மாலைப்பொழுது முதலிலே இருள்வந்து சூழ்ந்துகொண்டு ஆகாயத்தில் கரிய நீருண்ட மேகங்கள் பந்தி பந்தியாய் ஸஞ்சரித்துக் கரிய மலைப்பாம்புகள் ஒன்றையொன்று விழுங்குவதுபோல் ஒன்றினுள் ஒன்றாக பாய்ந்தோடிப் பறந்தன. மின்னல் ஆகாயம் எங்கும் சிறிது நேரத்திற்

கொருதரம் பளிச், பளிச்சென்று கண்ணைப்பறித்தன. பெரிய காடுகளில் சிங்கங்கள் கர்ஜிப்பது போல மேகங்களெல்லாம் அன்று இடித்த இடி எங்கும் பயங்கரமாயிருந்தது. கூடக்காற்றும் மழையும் சேர்ந்துவிட்டது. அப்பு, தேயு, வாயு ஆகிய மூன்று பூதங்களும் சேர்ந்து பேசிக்கொண்டு பூமியை அழிக்க யத்தனித்து விட்டனவோ எனத்தோன்றியது. இந்த அல்லோகல்லோலத்தின் மத்தியில் வில்வமங்களன் பயித்தியம் பிடித்தவன்போல் சிந்தாமணியை நினைத்துக்கொண்டு புறப்பட்டுவிட்டான். காற்றும் மழையும் கலந்தடிப்பது வில்வமங்களனுக்குத் தெரியவேயில்லை. வெறிபிடித்தவன் போல் ஓடிவந்து ஒரு ஆற்றின் கரைக்கு வந்து சேர்ந்தான்.

இதற்குள் நன்றாக இருட்டிவிட்டது. ஆற்றின் அக்கரையில் தான் சிந்தாமணிவீடு. ஆற்றில் பெருவெள்ளம் கரைபுரண்டு ஓடியது வில்வமங்களனுக்கு ஆற்றை எப்படிக் கடந்துபோவது என்ற ஏக்கம் வந்துவிட்டது. ஆனாலும் எப்படியாவது ஆற்றைக்கடந்துபோவது என்ற எண்ணத்துடன் ஆற்றைக்கடந்து பார்த்தான். ஆற்றில் ஏதோ மிதந்துபோவதுபோல் தோன்றியது. உடனே ஆற்றில் குதித்து அதை கெட்டியாய்ப்பற்றிக்கொண்டு அக்கரை சேர்ந்தான். உடனே சிந்தாமணி வீட்டண்டையும் வந்துவிட்டான்.

இந்த கனத்தமழையில் யார்தான் கதவைத் திறந்து வைத்திருப்பார்கள் கதவோ சாற்றப்பட மறந்தது. சுற்றுமுள்ள சுவர்களோ வெகு உயரமாயிருந்தது. என் செய்வான். வீட்டைச் சுற்றிச்சுற்றி வந்தான். கடைசியில் சுவற்றில் ஏதோ தொங்குவதைக் கண்டான். உடனே ஆவலாய் அதைப்பற்றிக்கொண்டு சுவரேறி உள்ளே குதித்தான். உடனே சிந்தாமணி படுக்கையறையுள் புகுந்தான். அங்கு அவள் சாப்பிட்டுவிட்டு வெற்றிலை போட்டுக்கொண்டிருந்தாள். 'சிந்தாமணி! வந்து விட்டேன்! நீ சொன்னபடி எல்லாம் செய்துவிட்டு வந்துவிட்டேன்' என்று கூறிக்கொண்டே அவளை அணுகினான்.

இவன் கிட்டேவருங்காலத்தில் இவன் மேலிருந்து ஒரு துர்நாற்றம் வீசியது; உடனே சிந்தாமணி பிரமித்து இந்தக் காற்றுமழையில் எப்படிவந்தாய்? என்ன உன்னிடம் ஏதோ துர்க்கந்தம் வீசுகிறது? என்ன காரணம்? என்றாள், அப்போதுதான் வில்வமங்களனுக்கு தன் மேலிருக்கும் துர்க்கந்தம் தெரிந்தது. அந்த நாற்றத்தை அவனாலுங்கூட சகிக்கமுடியவில்லை. 'என்ன காரணமோ தெரியவில்லை. கருமங்கள். முடித்து விட்டு உடனே புறப்பட்டு வந்து ஆற்றைக்கடந்து இங்குவந்து சுவரேறிக்குதித்து உள்ளே வந்தேன் என்றான் வில்வமங்களன் எப்படி இந்தப்பெரிய சுவரேறிக்குதித்தாய் ஆற்றை எப்படிக் கடந்தாய்? என்று கேட்க, வில்வமங்களன் தான் வந்த விபரத்தை சாங்கோபாங்கமாய் எடுத்துரைத்தான் 'என்வீட்

டுச்சுவறில் உனக்கு யார் கயர் கட்டியிருந்தார்கள்? அப்படி ஒன்றும் இருந்ததாக எனக்கு ஞாபகமில்லையே, பார்ப்போம் என்று சிந்தாமணி ஒரு விளக்கை எடுத்துக்கொண்டு வில்வமங்களனையும் அழைத்துக்கொண்டு தன்வீட்டுச் சுவரண்டை வந்தாள். அப்போது மழையும் நின்றுவிட்டது வில்வமங்களனும் தான் ஏறிவந்த விடத்தைக் காட்டினன். அங்கு ஒரு கொடிய கிருஷ்ண ஸர்பம் சுவற்றில்தொங்கிக்கொண்டிருந்தது. உடனே பதறிவிட்டாள் சிந்தாமணி. பிறகு ஆற்றைக்கடந்து வந்தவழியை நோக்கி நடந்தார்கள் அங்கு ஒரு பிணம் ஒதுக்சப்பட்டிருந்தது. அப்பிணத்தின் மேலிருந்து வரும் வாடையும் வில்வமங்களன் மேலிருந்து அடிக்கும் நாற்றமும் ஒத்திருந்தது. இந்தபிணத்தை பிடித்துக்கொண்டா கரையேறினய்? ஒரு தாஸியான என்னிடம் இவ்வளவு காதலா உனக்கு? பிணம் பாம்பு, காற்றுமழை இவைகளை எல்லாம் மறந்து ஒரு அற்பவேசையான என்னிடம் காட்டும் காதலில் ஒரு லவலேசத்தை பகவானிடம் காட்டியிருந்தால் உனக்கு எவ்வளவு மேன்மையுண்டாயிருக்கும் உனது முழு மனப்பற்றுதலை வகித்து அதற்குத் தக்கபடி உன்னைச் சிறப்படையும்படி செய்ய அந்தப் பரம்பொருளுக்கே திறமையுண்டு என்று பரபரப்புடன் மொழிந்தாள்.

சிந்தாமணி சொன்ன ஒவ்வொன்றும் வில்வமங்களன் மனதில் நன்ருக பதிந்தது. கொஞ்சநாழிகை ஸ்தம்பித்துநின்ருன். மனம் மாறியது. சிந்தாமணி! நீ சொன்னது முற்றிலும் உண்மை! என்று மிக உருக்கமாகக் கூறிவிட்டு ஓடவாரம்பித்தான். சிந்தாமணி அவனைத் தடுக்கவாரம்பித்தாள். முடியவில்லை வில்வமங்களன்போயே போய்விட்டான். கடைசியில் வில்வமங்களன் சோமகிரி என்ற ஞான சத்குருவை யடைந்து கோபிகாலோலனும் பக்த பராதீனனுமான ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் மகிமைகளை உபதேசமாகப் பெற்று ஸ்ரீ கிருஷ்ணலீலைகளில் ஈடுபட்டான். மனம் உருகியது. சிற்றின்ப உணர்ச்சிகள் கழன்றன. உடனே ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவை ஸ்தோத்தரிக்க எண்ணி ஸ்ரீகிருஷ்ணகர்ணாம்ருதம என்ற கிரந்தத்தை இயற்றினன், இதனல் இவனுக்கு 'லீலாசுகர்' எனப் பெயர்வந்தது. இவர் இயற்றிய கிருஷ்ணகர்ணாம்ருதம் என்ற நூல் ஒப்புயர்வற்றது. இதில் சிலவிடங்களில் பழமொழிகளை பகவத் லீலைகளில சம்பந்தப் படுத்தி அநேக சுலோகங்கள் எழுதியிருக்கிறார். உதாரணமாக இங்கு ஒரு சுலோகம் எடுத்துக் காட்டுவோம்:—

"மாதஹ்கிம்யது நாததேஹிசஷகம் கிம்தேனபாதும் பயஸ்கந் நாஸ்த்யத்ய கதாஸ்திவாநிசி நிசாகாவாம் தகாரோதயே! ஆமீல்யாக்ஷியுகம் நிசாப்யுபகதா தேஹீதி மாதுர்முஹுர்வ க்ஷோஜாம் சுகர்ஷ ணோத்ய தகாரஹ கிருஷ்ணஸ் ஸபுஷ்ணாதுநஹ !!

(தாத்):—அம்மா! என்ன யதுநாதா? அந்தப் பாத்திரத்தைக் கொடு எதற்காக? பால்குடிக்க. இப்பொழுது பால்கிடையாது. பின்னே எப்பொழுது கிடைக்கும்? இரவில். அது எப்பொழுது வரும்? இருள் வந்து மூடிக்கொண்டால். கிருஷ்ணன் உடனே தன் இரண்டு கண்களையும் மூடிக்கொண்டு இருள் மூடிவிட்டது. பால் கொடு பால் கொடு என்று மன்றாடினார். இத்தகைய கிருஷ்ணன் நம்மைக் காப்பாற்றட்டும். (மேலேகூறிய ஸ்லோகத்திலிருந்து 'பூனை கண்ணை மூடிவிட்டால் உலகம் அஸ்தமித்து விடுமா' என்ற பழமொழி விளங்குகிறது).

இவ்வாறு ரஸமடங்கிய ஸ்லோகங்களாலாகிய கிருஷ்ண கர்ணாமிருதத்தைச்செய்து மஹாஞானிகள் அடையும்படியான ஞானநிஷ்டை முடிவையும் லீலாசுகர் அடைந்தார்.

ஸ்ரீ கிருஷ்ணபக்தன், உடையாளூர்.

---

## கல்வியும் செல்வமும்,

### கட்டுரைச் சொற்கள்.

| செல்வமும் இருளும் சரி. | கல்வியும் ஒளியும் சரி. |
|---|---|
| செல்வம் நிலத்திற் புதைக்கப்படும் | கல்வி மனத்திற் பதிக்கப்படும் |
| செல்வம் கீழே தாழ்த்தும் | கல்வி மேலே உயர்த்தும் |
| செல்வம் புத்தியை தளரச்செய்யும் | கல்வி புத்தியை வளரச் செய்யும் |
| செல்வம் வெள்ளத்தில் அடிபடும் | கல்வி கற்றோர்தம் உள்ளத்தில் பிடிபடும் |
| செல்வம் கள்வரால் அபகரிக்கப்படும் | கல்வி கற்றோரால் உபகரிக்கப்படும் |
| செல்வம் எரியில் வெந்துபோம் | கல்வி தீ முதலியவற்றால் அழிவுறாது |
| செல்வம் துன்பத்தைக் கொடுக்கும் | கல்வி இன்பத்தை மடுக்கும் |
| செல்வம் அபாயத்துண் மடுக்கும் | கல்வி உபாயத்தைக் கொடுக்கும் |
| செல்வம் பகையை யுண்டாக்கும் | கல்வி அப்பகையினைப் போக்கும் |
| செல்வம் அபகாரங்களை வருவிக்கும் | கல்வி உபகாரங்களை தருவிக்கும் |
| செல்வம் காமத்தை விளைவிக்கும் | கல்வி காமத்தை விலக்கவைக்கும் |
| செல்வம் நாள்தோறும் உறுமாயும் | கல்வி நாள்தோறும் உருவேயும் |
| செல்வம் கொடுக்கக் குறையும் | கல்வி கொடுக்கக்கொடுக்க நிறையும் |
| செல்வம் இவ்வுலகத்தே அழியும் | கல்வி அவ்வுலகத்திலும் அழியாது |
| செல்வம் செல்வோமென்றும், தரித்திரம் தரித்திரோமென்றும் போய்விடும். | கல்வி என்றும் அழியாத நித்திய ஜீவனைக் கொடுக்கும். |

*K. R.* கணபதி பிள்ளை, சுண்டக்காமுத்தூர்.

## இரஞ்சிதனின் மனோஸக்தியைப் புகழ்தல்.

இரஞ்சிதமே! உன்னை யான் இவ்வாடி மாதந் தொடுத்தேன். தொடுத்து நோக்க உண்டாய எண்ணம் அடியில் காணுமாறு:

1. உயிரின்றி வாரா தெனுமொழி உன்னிற்
பயிலுமென் பக்கம் பலிக்கா(து)—அயலிலே
நீயிருக்க ரஞ்சிதமே! நீள்புவியில் யாவர்தான்
வாயடிக்கப் போவார் வழுத்து.

பின்னர் நீ இம்மாதம் போந்து காட்டிய உனது மனோ ஸக்தியை நினைத்தவுடன் மனதில் எழுந்தவை

2. ஓ ரஞ்சிதமே! உன(து)எழ் பகுதியினைச்
சாரஞ் சிறிதுஞ் சரியாமல்—தீரஞ்சேர்
நெஞ்சிற் பதித்து நிமலனை வாழ்த்திக்
கொஞ்சி மகிழ்ந்தேன் குழைந்து.

3. குழைந்துன்பாற் கூற விருந்த குறிப்பை
நுழைந்துநீ கண்டாய் நுவலில்—தழைந்த
உடல்கொண்டு போந்த உறுதியே யானும்
திடங்கொண்டு நின்றேன் சிறித்து.

4. சிரித்துநான் செப்பாமுன் சீர்செய்து நீயும்
உரித்த விகர வுயிரைப்—பொருத்திப்
புரட்டாசி போந்த புதுமையால் யாரும்
விரட்ட முடியா துனை வீண்.

5. இந்நாள் வரையும் இனிதளிக்கும் ரஞ்சிதமே
உன்னு ஙடைந்த வுறுதியினைப்—பின்னுளிற்
கண்டு களித்தேன் கடவுளே உந்தனுக்குக்
கொண்டு கொடுப்பார் குறித்து. சுபம்!

ஆதிநாராயணன் பிள்ளை,
உபாத்தியாயர், ஆனைமலை.

---

## நல்லொழுக்கம்

அருந்தமிழ்ச் செல்வியும், சரஸ்வதி தேவியின் அவதாரியுமான ஔவைப்பிராட்டியார் "வெட்டெனப் பேசேல்" என்ற அமிர்த வாசகத்தை அருளினர். இத்திவ்யவாக்கின் கருத்தின்னதென ஆராயுமிடத்து, அஃது கடுமையாகச் சொல்லலும், கேட்போருக்கு மனவருத்தம் உண்டாகும்படி பேசுதல் கூடாதென்பதே. கடுமையாய் பேசுதலையொழித்து, சாந்தமாய்ப்பேசுதல் வேண்டும். சகல ஜனங்களோடு உறவாயும், சிறிதும் பகையின்றி இருந்தால் அனுப்பிரமா

ணம் பாவமணுகாது மனம்போனமாதிரி செய்யாது, எந்தக்காரியத்தையும், ஆழ்ந்து செய்தலே வேண்டும் மனம் எந்தமாதிரியோ அம்மாதிரியே வாயும் பேசுமென்பது உலக வழக்கம். களங்கமற்ற மனத்தோடுபரிசுத்தமாயிருந்தால், அவனவன் வாயினின்று உதிக்கும் வார்த்தையும், சுத்தமாயும் இனிமையாயுமிருக்கும். இல்லையேல் கடுமையும் களங்கத்தோடும், வெறுப்பைத் தரத்தக்கதாயு மிருக்கும். சுத்தமன்துடையோருக்கு நல்லவசனம் பேசும்தன்மையுண்டு. ஆதலால் அன்னோனை பாவம் அணுகவேமாட்டாது. எச்சமயமும் சாந்தசீலத்தோடு இருக்கப்பார்ப்பதே மேன்மை. இல்லாது கடுஞ்சொல் கூறித்திரிவோனை, குழந்தைகளும், பெரியோரும், பண்டித பாமரரும், சிநேகிதனும், பகைவனும், பந்துக்களும், தன்னைப்பெற்றோரும் மனைவியும், மைந்தர்களும் தீர்மானமாய் வெறுத்துத்தள்ளுவார்கள். மேற்கூறியவாறு வெறுத்துத் தள்ளிவிடும் பக்ஷத்தில், இச்சுபாவமுள்ளவனுக்கு, லோகவாழ்வில் குறைவேற்படும், அச்சமயம் மிக்க தாழ்ந்த நிலைமையில் இருக்க ஏதுவாகும். பாவி எனப் பெயர் பெற்று, இகத்திலும் பரத்திலும், சிறிதும் நன்மையைப்பெறார்கள். இதுபற்றியே நாயனார் "துன்புறூஉந் துவ்வாமை யில்லாரும் யார் மாட்டும், இன்புறூஉ மின்சொல் வர்க்கு"

அதாவது சகலரிடத்திலும் இன்பத்தை யுண்டாக்கும் இனிய மொழி கூறுபவர்களுக்குத் துன்பத்தை யுண்டாக்கும் தரித்திரமிலாதென்பதே, இதுகாரணமே, இனிது கூறலால் உலகத்தில் துன்பமின்றி சுகமான வாழ்வு உண்டென்பதை அறியலாகும். பாபம் ஒழித்து, புண்ணியம் பெருக வழி யாதெனில், இன்பமுண்டாகும் இனிய மொழிகளைப் பேசுதலே.

" அல்லவை தேய வறம்பெருகு நல்லவை
நாடி யினிய சொலின் " எனபதும்
" சிறுமையு ணீங்கிய வின்சொன் மறுமையும்
இம்மையு மின்பந் தரும்,"

குற்றமற்ற இனியமொழி கூறுவதென்பதானது, இம்மையிலும் மறுமையிலும் இன்பத்தைத்தருமென்பது. சகலரும் தன்வசப்பட்டு தனக்கு யாதொரு இடறும் செய்யாதிருத்தலேயே இம்மையில் இன்பம் என்பது. பாபம் நீங்கி, புண்ணியம் பெருகி, சொர்க்கம் முதலிய போகங்களைப்பெற்றுச் சுகத்தோடிருத்தல், மறுமையில் இன்பம் என்பது. இம்மையிலும், மறுமையிலும், மிக்க இன்பத்தை நமது வாயினின்று நன்மொழிகளைப் பகர்ந்து அடையலாமென்றால், ஆ, இதன்பெருமை எவ்வளவு மேன்மையுடையதென்பதை சொல்லத்தரமுண்டோ? இதுகாரணமே பெரியோர் இதனை நல்லொழுக்கத்தின் ஓர் அங்கமெனக் கைகொண்டார்கள். இனிது கூறல் என்பது யாவருக்கும் பொது. பேரின்பத்தைக் கொடுப்பது, பெருமையை

உடையது என்பதை சிறிதும் உணராது அதனை ஒழித்து, கடு மொழி கூறுவோர்க்கு உதவிபாய்ப் பேசுவது, எவ்வித மெனில்,

"இனியவுள வாகவின் னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று."

இனிய மொழி இருப்பதை யுணர்ந்தும், கடுஞ் சொற்களை கூறுவதானது, பழமிருக்க காயைப்பறித்துத் தின்பதுபோலன்றோ? கனியையொழித்து சுவையில்லாத காயைத் தின்கின்றவனை மதியீன னென்றும் சொல்லுவதுபோல, கடுமொழி கூறலை புத்தியீனமென் பதாய் விளக்கப்பட்டது நிற்க, நல்லொழுக்க முள்ளவன் தன் மனச்சாட்சிக்கு உரிமைப்பட்டவனாகின்றான். தன் முயற்சியினாலும் வார்த்தைகளினாலும் அவன், யாதொரு செய்கைகளிலும் தன்மனச் சாட்சியைச் செலுத்துகின்றான். பக்திசிரத்தை யுடையவனாயுமிருக் கின்றான். மேலான நோக்கம், தூய்மையான சிந்தனைகள், கௌரவ மான கருத்துகளுடன் அன்னோன் இருப்பதனால், அவனறியாதே அவனது மேன்மைத்தனம் நன்கு விளங்கிக்காட்டுகின்றது. ஒருவ னுக்கு இத்தியாதி குணமில்லையேல், தெய்வத்தின்பாலேனும் சிறிதும் நம்பிக்கை, பக்தி, அந்தரங்க உண்மை உண்டாகாது. ஆனால் இவ் வித உத்தம குணத்தையுடைய மனிதன் சகல சம்பவங்களையும் தனது அனுபவத்திற்குட்படுத்தி, அதினின்றுகிடைக்கும் அனுபவத் தையும், விவேகத்தையும், மற்றும் இதுகளினின்றும் கிடைக்கும் செயல்களைச் செய்வதினால் தன்னுள் எழும் அன்பினால் இறங்கு வதும் மரணத்தை விரும்புவதும், அவமானத்தை வெறுப்பதுமான வழியை அடைகின்றான். காரணம் யாதெனில் தான் ஒரேதன்மை யைக்கைக்கொண்டதுவே. உண்மையே அவனுக்குத் தெய்வம் ஜன சமுகங்களில் பிரகாசிக்கும் சூர்யன்.

"இன்சொ லினிதீன்றல் காண்பா னெவன்கொலோ
வன்சொல் வழங்கு வது."

நல்லொழுக்க இனிய மொழியினால் இன்பத்தை அடையாமல் அதனை அடையவழி அதன்றி வேறொன்றில்லை எனத்தெரிந்திருந் தும் அதைவிட்டு கடுஞ்சொற்கூறி தீய வொழுக்கத்திற் புகுவது ஏனோ? இன்சொல்லே இன்பத்தைத்தரும், இதனையே எல்லோ ரும் கைக்கொள்ளல்வேண்டும். இம்மை மறுமை இரண்டிலும் பெ ரும் பயனைத்தரும். சகலருக்கும் திருப்தியையும் மகிழ்ச்சியையும் தரும். இன்சொல், எல்லாம் வல்ல இறைவனுக்கும் மகிழ்ச்சியைத் தருமென்பதில் யாது ஆக்ஷேபம். ஆதலால் நாமெல்லோரும், மோட்ச சாம்பிராச்யம்பெற்று சுகித்திருக்க நல்லொழுக்கத்தின் ஓர் அங்கமாகிய இன்சொல் கூறுதலை கைப்பிடித்தொழுகுவோமாக.

S. V. Iyer, Trichur.

## புலாலுண்ணல்.

புலாலுண்ணலாவது உயிரின் நீங்கிய ஊனைப்புசித்தல். புலால் கொலையினாலே கிடைத்தலால், புலாலுண்ணல் கொலைப்பாவத்தின் காரியமாகும். புலாலுண்டவன் பின்னும் கொலைவாயிலாகப் புலாலை விரும்புதலால், புலாலுண்ணல் கொலைபாவத்துக் காரணமுமாகும். இப்படியே எல்லாவிதத்தாலும் புலாலுண்ணல் கொலையோடு தொடர்புடையதாதலால் புலாலுண்பவர் உயிர்களிடத்து அருளில்லாதவரே.

"தன்னூன் பெருக்கற்குத் தான்பிறிது உண்பர்
எங்ஙனம் ஆளும் அருள்"

தன்னுடம்பை வளர்த்தற்பொருட்டு மற்றொன்றின் உடம்பை தின்பவன் எவ்வகையால் அருளை ஆளுவான். ஒரு வகையாலும் ஆளமாட்டான் என்பது கருத்து. ஆதலால் புலாலைப் புசித்துக் கொண்டு உயிர்களிடத்து அருளுடையோம் என்பது நடிப்புமாத்திரமேயன்றி உண்மையாகாது, உலகத்திலே புலால் உண்பவர் இல்லையாயின், புலாலைவிற்றற்பொருட்டு உயிர் கொலைசெய்பவரும் இல்லை. ஆதலால் கொலைப்பாவத்தைப் பார்க்கிலும் புலால் உண்ணலே பெரும் கொடும்பாவம்.

"உண்ணாமை வேண்டும் புலால் பிறிதொன்றின்
புண் அது உணர்வார்ப் பெறின்"

புலாலானது வேறொரு உடம்பினது புண்ணாகும் அப்புலால் அசுத்தமாயிருக்கையை அறிந்தவர்கள் பெற்றால் அப்புலாலை உண்ணாதொழியவேண்டும்.

ஜீவன்களிடத்துக் காட்டும் காருண்யமே உண்மையான ஈஸ்வரத்தியானமாகும். இதை நோக்கியே தாயுமானவர்,

"அன்பர்பணி செய்யவென்னை யாளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே"

என்று கூறியுள்ளார்.

முற்காலத்திலிருந்த புத்தர், அசோகர் முதலிய அரசர்கள் எல்லாம் ஜீவகாருண்யமே தமது முக்கிய கடமையெனக்கொண்டு ஜீவப்பிராணிகளிடத்தில் அன்புபாராட்டி அச்சீவன்களுக்கு வேண்டிய சௌகரியங்கள் எல்லாம் செய்துவந்தார்கள், தற்காலத்திலோ நமது அரசர்களும், குடிகளிற் சிலரும் அதைக் கவனிக்காததால் "புலையுங் கொலையுங் களவுந்தவிர்" என்பது போய் 'புலையுங் கொலையுங் களவுங் கொள்' என்பதைக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர்.

"கொல்லா விரதம் குவலயத்தோர்கள்
எல்லாம் பெருமினென் றியம்பிய தயாநிதி"

என்றபடி கொல்லாமையே ஜீவகாருண்யமாகுமென்று கூறியிருக்கின்றார். விதண்டாவாதம் செய்வோர்களுக்கு இஃதைச்சொல்ல முன்வரவில்லை. புலால் உண்பதால் மந்தம், சுறுசுறுப்பு, ஜீரண சக்தி இவைகளில்லாது கஷ்டப்படுவார். நற்புத்திகெடும். ஓர் குழந்தையைக் கஷ்டப்படுத்தினால் அக்குழந்தையின் தாய் சகிப்பாளா! அதுபோல எவ்வுயிர்க்கும் பிதாவாகிய ஈசன் தன் குழவிகளாகிய பக்ஷி, மிருகம் இவைகளைக் கஷ்டப்படுத்துவதைப் பார்த்திருப்பாரோ? அவர்களைத் தண்டிப்பாரேயன்றி சும்மாவிடார்.

" கொல்லா விரதம் குவலய மெல்லா மோங்க
எல்லார்க்குஞ் சொல்வ தென்னிச்சை பராபரமே

என்று கொல்லாமையைப்பற்றி விரிவாய்க் கூறியிருக்கின்றார்.

எவ்வுயிரும் பராபரன் சன்னதியேயாகும். ''இலங்கும் உடலுயிர் அனைத்தும் ஈசன் கோயில்'' என்று கருதாது உயிர்களை நமக்குத் தின்பதற்காகவே கடவுளானவர் சிருஷ்டித்திருக்கிறார் என்று நினைத்துக் கொன்று சாப்பிடுகின்றனர். மற்றும் சிலமதத்தினர் சிறு ஜந்துகளைப்பெரும் ஜந்துகள் சாப்பிட்டு உலகில் ஜீவிப்பதற்கு கடவுளால் உண்டாக்கப்பட்டதல்லவா என்று நம்மை வாய்ப்பூட்டிவிடுகின்றனர். அவர்களுக்கு ஈண்டு சமாதானம் கூறுவோம்.—புல் பூண்டுகளைச் சாப்பிடுவதற்கு பெரியோர்களும் சாஸ்திரங்களும் குறைகூறவில்லை. அன்றியும ஒரு மரத்திற்குப் பதில் மற்றொரு மரத்தை அதனிடத்திருந்தேவெட்டி முன்மரமிருந்த இடத்திலே பயிராக்கலாம். ஏனெனில் அதன் வம்சம் அழியாதிருக்குப்பொருட்டு. ஆனால் மாடு, ஆடு, கோழி இவைகளைக் கொன்றால் அவைகளுக்குப் பதில் அதன் ஜாதிகளும் அவைகளும் விருத்தியாகாது. நாளடைவில் அதன் வம்சமே காண்பதரிதாகிப் போய்விடும்.

தம்மினும் உயர்ந்த ஜாதியார், தாழ்ந்த ஜாதியாரிடத்தே சலபானம் பண்ணினும் அவருந்தாழ்ந்த ஜாதியார் என்று, அவர்வீட்டிலே சலபானம பண்ணுக மனிதர்கள், புலையர்களுடைய மலத்தையும் புசிக்கின்ற பன்றி, கோழி முதலியவைகளைப் புசிக்கின்றார்களே அவர்கள் புலையரினும் தாழ்வாகிய புலையராவார்களின்றி உயர்ந்த ஜாதியாராகார்கள். அயல்வீட்டிலே பிணங்கிடந்தாலும் போசனஞ் செய்வதற்கு மனம் பொருந்தாத மனிதர்கள் மிருகம், பக்ஷி முதலியவைகளுடைய ஊனைக் கலத்திலே படைத்துக்கொண்டு புசிக்கின்றார்களே. அன்னம், தண்ணீர் முதலியவைகளிலே மயிர், ஈ எறும்பு முதலியவைகளுள் ஒன்று விழுந்திருக்கக் கண்டாலும மிக அருவருத்து உண்ட சோற்றையும் கக்கும் மனிதர்கள் மச்ச மாமிசங்களைப் புசிக்கின்றார்களே!

" ஊறு காயிற் புழுக்களுற்ற தெறிந்திடுவோர்
நாறு கருவாட் டின்நடுப் புழுவை—வேறுசெய்து
கார்ப்பு முதற்சேர்த்து களிததுண்பார் தம்மைநெஞ்சே
சேர்ப்பார் நரகாள்வா ரெனத் தேர் "

என்றபடி ஊறுகாய் முதலியவைகளிலே ஒரு புழுவைக்கண்டால் அருவெறுத்துச் சரீரம் நடுங்கி அவைகளை எடுததெறிந்துவிடும் மனிதர்கள், புழுத்த கருவாட்டின் மாமிசங்கள் புசிக்கின்றார்களே ! தங்களெதிரே ஆடுகள் சிந்தத்தெரித்த கோழை தங்களுடம்பிலே படுதலும், பொறுது மனங்குலையும் மனிதர்கள் அவ்வாடுகளின் மாமிசத்தை மூளையோடு மனமகிழ்ந்து புசிக்கின்றார்களே! பூமியில் உள்ள சுடுகாடுகள் மனிதருடைய பிணத்துக்குச் சுடுகாடுகளாயிருக்கும். மிருகங்களுக்கும், பட்சிகளுக்கும், மச்சங்களுக்கும், மற்றுமுள்ள வாயில்லா ஜீவன்களுக்கும் சுடுகாடுகள் ஜீவகருணையில்லா மனிதர்களுடைய வயிறுகளேயாகும்.

" புலியும் பசுவும் பொருந்தி யிருந்தே
நலியின்றி வாழ்ந்த இந்நாட்டிற்—கலிமிகவே
சற்றிரக்க மில்லார்தஞ் சாண்வயிற்றில் ஊனிரப்பக்
கற்றிருப்ப தென்னோ களித்து "

" அம்மாவென வலற ஆருயிரைக் கொன்றருந்தி
இம்மானிட ரெல்லாம் இன்புற் றிருக்கின்றார்
அம்மா வெனுஞ் சத்தம் கேட்டகன்ற மாதவர்க்கும்
பொய்ம்மா ஙிரய்மென்றாற் புசிப்பவர்க் கென்சொல்லுவீரே "

" ஆடுகொன்று தின்னும் அதிபாதகர் செத்த
மாடுதின்போர் புலைய ராக்களென்று நாடுகின்ற
தெப்படியோ சொல்லுவீ ரெம்மவரே யிங்குமிக்க
தப்படியே செய்தவரார் தாம் "

" கொன்றாற் பெரும்பாவங் கொன்றவன் தாய்தன்னைத்
தின்றாற் போகாது கொடுந்தீரகிற்—சென்றாழ்ந்து
கற்பம் பலகிடந்து காதகஞ்செய் தீவிலங்காய்
பற்பலதுன் பெய்துவனப் பார் "

" புன்புலா லென்று புகன்ற வருட்பாக் கருத்தை
அன்புளார் பார்கேட் டறியாமல்—வன்புலால்
உண்பரை யெல்லா வுயிரெம் முயிரென்போர்
கண்பார்க்க நேரிடுமோ காண் "

" கலையெலா முணர்ந்தா ரேனும்
சரிசறத் தெரிந்தா ரேனும்
உலகெலாம் புகழப் பல்லோர்க்

குதவிய கைய ரேனும்
மலையென உயர்ந்தா ரேனும்
மனமயல் அகன்றா ரேனும்
இலகிய இரக்க மில்லான்
எழுநர கடைவ னன்றே"

புலாலுண்ணாமையினாலே தங்கள் உடம்பு மெலிகின்றது என்று உண்ணப்புகும் மனிதர்கள் புலாலுண்டு தங்கள் உடம்பைப்பருக்கச் செய்து நரகத்திலே நெடுங்காலம் துன்பம் அநுபவித்தல் நல்லதோ. புலாலுண்ணாமல் தங்களுடம்பை வாட்டி நித்தியமாகிய முத்தியின் பதத்தைப்பெற்று வாழ்தல் நல்லதோ. இதைக்கண்ணுறும் சகோதரர்களே! தனிமையாய் சிந்திக்கக்கடவீர்கள். அதற்கு கருணைமிக்க கடவுள் துணைநின்று உங்களை நரகிற்கு செல்லவிடாது முத்தியின் பதத்தை நாடிச்செல்லும்படி கருணை பாலிப்பாராக.

K. சாமிநாதன்,
ரத்தின விலாசம், எட்டையாபுரம்.

## கற்பு.

அலைகடற் புவிமிசை அனைவரும் விரும்பும்
மலைநிகர் தனத்தார் மாட்டுள கற்பே.
கற்ப தெதெனக் கணிக்கில், மகளே,
பொற்புடை நாயகன் புந்தி வருந்தா(து)
இற்படு காரியம் இனிது முடித்துச்
சொற்றிறம் பாமற் சொகுசுட னவர்க்கு
நற்பணி யாவும் நலமுடன் இயற்றி
விற்பிரி யாநீர் போலும் வீட்டுள
மாமி மாமன் மற்றுள மைத்துனர்
காமி யல்லாக் கனபந் துவர்க்கம்
பூமி தனில்வரும் புண்ணிய புருஷர்
சாமியென நிற்கும் சற்ச னருடன்
கூவி வேண்டுங் குறையுள மாக்கள்
தாவி ஓடுந் தஞ்சிறு மைந்தர்
இன்னும் உள்ள இளங்குழந் தைகள்
என்னும் இவர்கட்(கு) இட்ட முடனே
சொல்லும் பொருளும் சோறு தீந்து.
நல்லவ ளெனவே நாட்டிடை நடந்து
கணவனே தெய்வம் கணிக்கில் அவன(து)
உணவதே யமிர்தம் உண்ட வெச்சில்
மணமது கொண்ட மங்கள வீசன்
குணமுடன் தந்த கூறொணாப்பிர

சாத மெனவே சலியா தேற்று
நீத முடனே நிற்பதாம். நிற்கில்,
ஓதவும் வேண்டுமோ உன்றன் பெருமை
வாத மிடவரும் வன்சமன் றன்னையும்
நில்லென நிறுத்த நினக்கெளி தாகும்,
கல்லும் மண்ணும் கருத்தில் நினைத்த
பல்லுரு வாகும், பரமன் றானும்
அல்லும் பகலும் அன்புடன் உனக்கு
நன்மங் களமாய் நாடிய காரியம்
பின்னம தாகாப் பேருப காரம்
செய்தே நின்னை க்ஷேம மாய்த்தன்
பொய்யில் வாழ்வைப் போற்றி அளிப்பன்.
இன்னதிற் சற்று ஏறு மாறாய்த்
தன்னயங் காட்டுந் தடியர் மயலில்
உன்னது கருத்தை ஊன்றி விட்டால்
என்ன தாகுமோ இசைக்க முடியா.
சின்ன பின்னம் செய்யச் சீக்கிரம்
தன்மனங் கொள்வான் தக்க கணவன்.
அன்னவன் நிற்க அரனவன் றானும்
கன்மன மாகக் கடிந்துந் தனையே
தன்ன தாள்கையிற் றண்டிக்கச் செயும்.
அன்னதை நினைக்கில் ஐயோ, மகளே,
சொன்னயங் காட்டிய சோரத் தனமாம்
இன்னது வந்து இருப்புத் தூணைத்
தன்மனங் கொதிக்கத் தழுவச் செய்யும்.
பன்னெடு காலம் பாழ்நர கதனில்
மன்னி யிருக்க மாட்டும் மகளே.
இன்ன தொன்றே இடும்பை இடும்பை
ஆகையால் மகளே அறிவை மயக்கும்
சாயையால் மயங்கிச் சாமியை மறந்து
காமியர் மயலிற் கருத்தைப் பதியேல்.
பூமியில் வாழ்ந்த பொற்கொடி மாதர்
மேவி இன்னும் மேல்நிலை தன்னில்
சாமி என்றே சர்வத் திரர்களும்
பாவிக் கப்படும் பாரதம் சாட்சி.
தேவி அகலிகை திருந்து மர்ந்ததி
சாவித் திரியும் சான்றே காண்பாய்.
ஆவி யனையாய் அறிவாய் அறிவாய்

கல்லா னாலுங் கணவன் என்றும்
புல்லா னாலும் புருடன் என்றும்
பூவுல கதனில் புகுத்திப் பேசும்
பாவம் மறவாப் பக்தி யுடனே
தேவும் இவனே திரவியம் இவனே
நாமும் இவனே நனவிலுங் கனவிலும்
மறவா திருப்போம் மனமே என்று,
திறமாய் நினைத்துத் தினந்தின மன்பாய்
காலால் இட்டதைக் கையாற் செய்து
நாலா பேர்க்கும் நாயக மாய்நீ
"தெய்வந்தொ ழாள்கொழு நற்றொழு தெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை"யெனப் பேசிய
அய்யன் சொல்லை அவனி விளங்கச்
செய்தே வாழ்வை, சிவநேச மிலா(து)
இப்போ சிற்சில இங்க்லீஷ் காரர்
தப்பாய்ச் சொல்லுந் தாத்பரி யத்தை
மெய்யென நம்பி மேலென கீழென
ஐயனுஞ் சரியே அம்மையுஞ் சரியே
எல்லவர் களுக்கும் ஏகாதி பத்தியம்
செல்ல வேண்டுஞ் சேர்மே லெனக்கும்
மெள்ள விருந்து மீட்டிங் பார்க்க
உள்ள பாத்தியம் உவக்க வேண்டும்
உள்ள நினைவை உற்ற பாலில்
மெள்ளத் தீர்க்க மேவ வேண்டும்
இஷ்டம் ஆனால் இட்ட சரட்டைக்
கஷ்ட மின்றிக் கழற்றிக் கொடுக்கச்
சட்டம் வேண்டும் சர்வ இடமும்
தட்டின் றிச்செல் சர்வ சுதந்திரம்
கொடுக்க வேண்டும் கூறிய போது
விடுக்க வேண்டும் விளம்பேல் மறுமொழி
என்றே வாதிட்(டு) ஈன மடையா(து).
ஒன்றே கணவன் உண்டே அவன்பணி
என்றே நினைந்து இன்புடன் வாழ்ந்து
மன்றில் நடிக்கும் மகேசன் பதத்தில்
காதல் செலுத்திக் கனபத்ர புஷ்பம்
ஓத நீரும் ஊட்டிப் போற்றி
வீத மில்லா வீட்டை மேவக்
காதல் கொள்வாய் கண்மணி மகளே. சுபம்!

S ஆதிநாராயண பிள்ளை, உபாத்தியாயர், ஆனைமலை.

## "உபதேச ரத்ன மாலா"

முன்தொடர்ச்சி.

மலர் 9. 'வேலைக் கள்ளனாய்த் திரியாதே'. யாரும் தன்யஜமானன் தனக்கு நியமித்திருக்கும் வேலையை யாதொரு குற்றமும்கூற யிடமில்லாமல் செய்துமுடிக்கவேண்டும். தவிர எஜமானன் குறிப்பிட்ட இடத்திலிருந்து செய்யவேண்டும். இந்த குணம்தான் சிலரிடம் இருப்பதில்லை. தன் எஜமானன் குறிப்பிட்ட இடத்திலிருந்து அடிக்கடி மறைந்துபோகும் குணம் இருக்கும். ஒருவனை யாரும் நம்பமாட்டார்கள். தான் வேலைசெய்யும் இடத்தில் தன்னைக்காணாத தன் யஜமானன் மறுபடியும் தான் வந்தபோது எங்கே போனாய் என்று கேட்டால் அப்போது பதில் சொல்ல முடியாமல் விழிக்கவேண்டும். இதனால் மரியாதைத்தாழ்ச்சியும் அகௌரவமும் ஏற்படும். ஆகையால் வேலைக்கள்ளனாயிருக்கும் ஸ்வபாவத்தை முற்றிலும் துரக்கவேண்டும்.

மலர் 10. 'தர்க்கம் செய்யாதே.' கற்றோரும்மற்றோரும் சேர்ந்திருக்கும் சங்கத்தில் தர்க்கித்தல் என்பதே கூடாது. ஏனெனில் அது எவ்வளவு தான் கொஞ்சமாயிருந்தாலும் சிறிது மனவருத்தத்தையே உண்டாக்கும். ஒருக்கால் நம்மையறியாமலே நாம் தர்க்கித்து தர்க்கமும் முற்றிவிட்டால் வேடிக்கையானதொரு சந்தர்ப்பத்தை அந்த சமயம் கொண்டுவந்து விட்டு ஜனங்கள் மனதை சந்தோஷப்படுத்தி தர்க்கத்தை விட்டு விடவேண்டும்.

மலர் 11. 'ஒருவரையும் அதிகமாய் நம்பாதே' என்னதான் மனிதர்கள் எல்லாரும் ஒன்றென நாம் சொன்னபோதிலும் ஒவ்வொருவர்க்குள்ளும் சில வித்தியாசங்கள் இருக்க நாம் காணலாம் யோக்கியர்கள் கெட்டகாரியத்தையும் அயோக்கியர்கள் நல்லகாரியத்தையும் ஓரோரு சமயம் செய்வதை நாம் காணலாம். ஆகையால் எல்லோரையும் நாம் பரிசோதித்துப்பார்த்தபிறகே அவர்களை நம்பவேண்டும். ஒருவன்தான் நல்லவனென்றும் ஒருபொழுதும் பொய் சொல்லுவதே இல்லை என்று சொல்லிக்கொண்டாலும் அவனைநம்பி நாம் ஒரு காரியத்தை ஆரம்பித்தால் நம்மைப்போல் மூடர் வேறு இல்லை.

" தன்னுயுதமும் தன்கைப்பொருளும் பிறர் கைக்கொடுக்கும் பேதையும் பதரே "

மலர் 12 'மரியாதையாய் மறுத்துரை.' ஒரு சங்கத்தில் ஒருவர் பேசும்போது ஏதேனும் பிசகாக சொல்லிவிட்டால் நாம் அதை திருத்தும்போது மற்றொருவருக்கு நம்மேல் அருவருப்புத் தோன்றா வண்ணம் மிகவும் மரியாதையாய் மறுதளிக்கவேண்டும். அப்படி

யில்லாமல் கடுமையாகவும் கோபமாகவும் மறுதளித்தால் பிறருக்கு நம்மேல் அசூயை உண்டாகும். அதிலிருந்து சண்டைகள் ஏற்படும். ஆதலால் எதையும் மரியாதையுடன் உரைக்கவேண்டும்.

மலர் 13. 'விவாகம் செய்துக்கொண்ட பெண்ணை வீணுக்கடத்தாதே'

இந்த விஷயம் தான் பல குடும்பங்களில் இருப்பதில்லை. ஐயோ பாபம் !! பெண்கள் மனம் நோகச் செய்தால் அவ்வீடு விளங்குமா? 'பெண்பாவம் பொல்லாது' என்ற வாக்கியம் எதனால் ஏற்பட்டது ? ஒரு வீட்டில் பிறந்து மற்றொருவீட்டில் வாழ்க்கைப்பட்டு மாடுபோல் உழைக்கும் ஓர் பெண்ணை நாம் கண்டபடியெல்லாம் அடித்துத் தொந்தரை செய்வதாதர்மம்? அதற்காகவா அப்பெண் நம்மைத்தேடி வாழ்க்கைப்பட்டாள்? ஆதலால் பெண்களை நம்மிடம் அடங்கி இருக்கச்செய்து நாமும் அவர்களை மிகவும் கௌவரமாக போற்றி வந்தால் ஒரு நாளும் ஒரு குறையும் நேராது என்பது திண்ணம்.

மலர் 14. 'குற்றத்தை கௌரவமாய் ஒப்புக்கொள்.'

இதைத்தான் எவரும் எளிதில் செய்கின்றதேயில்லை. பலபெரிய மனிதர்களுங்கூட ஏதாயினுமொரு குற்றமுள்ள காரியத்தை செய்துவிட்டு அதன்பிறகு அது சரியானதென்று நிரூபிக்க எவ்வளவோ குயுக்திகள் செய்வார்கள். சிலர் தாங்கள் செய்யும் சிறு தொழில்களில் குணமிருக்கின்றதாக வாதிப்பார்கள். ஒரு காரியம் குற்றமென்று நமக்குத் தெரிந்தபிறகு செய்தது குற்றந்தான் என்று நாம் ஒப்புக்கொள்வது எவ்வளவு மேன்மை ? அவ்வாறு ஒப்புக்கொள்வது எவ்வளவு மேன்மை ? அவ்வாறு ஒப்புக்கொள்ளாமல் கோணலான வழியில் போவது நமக்கு ஒருபொழுதும் கௌரவத்தை உண்டாக்கமாட்டாது.

மலர் 15. 'எப்போதும் உண்மையே உரை' எப்போதும் ஒருவன் உண்மையே பேசிவருவானேயாகில் அவனுக்கு ஒருபோதும் கெடுதி என்பதே நேராது. நாம் பொய்யனல்ல என்று நம் எஜமானனுக்குத் தெரிந்துவிட்டால் நம்மை முழுதிலும் நம்பி நம்மிடம் வெகு நம்பிக்கையான காரியங்களை ஒப்புவிப்பார்கள். அதனால் நமக்கு புகழும் பெருமையும் எப்போதும் கிட்டும். உண்மையை கைப்பற்றி கீர்த்தியடைந்தவர்கள் எத்தனையோ பெயர்கள் உண்டு என்று நாம் சொல்லவே வேண்டுவதில்லை. ஆதலால் 'உண்மை பேசுதல்' என்ற நல்ல வழக்கத்தைக் கைப்பற்றவேண்டும்.

மலர் 16. அளவுமீறினால் அமுதமும் விஷம்.' சிலர், சில சமயம் நல்ல சாப்பாடு கிடைத்தால் வயிறு கொண்டமட்டும் உண்ணுவதல்லாமல் மனவெறுப்பு உண்டாகுமட்டும் உண்ணுகின்றனர்.

பிறகு வாந்தியெடுத்தல் முதலிய வியாதிகளால் கஷடப்படுகின்றனர் 32 சாண் உள்ள நம் குடலின் கணக்கறியாமல் அமிதமாகப் புசிப்ப வர் படும் பாடு கடைசியில் நோயால் வருந்தும்போது தெரியும், மிதபோஜனமே உடம்புக்கேற்றது.

"தீயள வன்றித் தெரியான் பெரிதுண்ணில்
நோயள வின்றிப் படும்" குறள்.

"தண்டமிழ்த் தொண்டன்"

## சங்குபாலகன்

### 7-ம் அத்தியாயம்.

(314-ம் பக்கத் தொடர்ச்சி.)

### வேட்டையாடுதல்.

அதைக்கேட்ட சங்குபாலகன் பேசாமல் தலையை மாத்திரம் அசைத்தான் அசைக்கவே சுவாமி உத்தரவிட்டு விட்டாரென மகிழ்ந்து ஆளுக்கொரு பிராணியைப் பிடித்துக்கொண்டு தம் நாட்டை நோக்கிவந்து விட்டனர். இவர்கள் சென்றவுடனே சங்குபாலகன் எழுந்து மயிலொன்று குயிலொன்று பிடித்துக்கொண்டு மற்றப் பிராணிகளை அனுப்பிவிட்டுப் பழையபடி ஒணான் தோலைப்போர்த்துக் கொண்டு தன்மனைவியினிடம் வந்து அவளிடம் மயிலைக்கொடுத்து அதை அவளுடைய தகப்பனிடம் கொடுத்துவிட்டு வரும்படி கூறி னான். அவள் தகப்பனிடம் சென்றால் அவன் தன்னைத்துரத்தியடிப் பானெனத்தெரிந்தும்; கணவன் கட்டளைப்படி நடப்பதே கற்புடை மை;"கற்பெனபடுவது சொற்றிறம்பாமை" என்பதை நன் ருய் அறிந்தவளாதலால் கணவன் கூறியபடியே மயிலைத் தன் தந்தை யின் அரண்மனைக்குக்கொண்டு சென்றாள். இவள் வருவதை தந்தை யும் உடன் பிறந்தார்களும் கண்டு "புண் பிடித்தவனை மணந்தவள் இங்கு ஏன் வருகிறாய், வரவேண்டாம்" எனக்கூறி அவளை அடித்துத் துரத்தினர் அவள் மயிலை அங்கேயே விட்டுவிட்டு ஓடிவந்து பிள்ளை யார் கோவிலுக்குச் சமீபித்தவுடன் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு மலர்ந்த முகமாய்க் கணவனிடம் போய்விட்டாள்.

எட்டுநாள் சென்றவுடன் மறுபடியும் உமயாபுரிமன்னனும் அவ னுடைய புதல்வர்களும் வேட்டையாடுதற்காக முன் சென்ற அட விக்கே சென்றனர். இதையறிந்த நம்சங்குபாலகனும் முன்போலவே சென்று அக்குளத்தருகி லமர்ந்து;பிராணிகளையெல்லாம் தன்னிடம் அழைத்து வைத்துக்கொண்டான். உமயாபுரி மன்னனுக்கு முன்

தடவை போலவே ஒன்றும் கிடைக்காமல் சங்குபாலக னிருந்த குளத்திற்கே வந்து சேர்ந்தான். அப்பொழுதும் நம் பாலனைக்கண்டு "தெய்வமே! என்மீது ஏன் இத்துணை முனிவோ? நான் யாது குற்றமியற்றினேன். எனக்கு வேட்டையில் ஒன்றும் சிக்கவிடாமல் அலையவைக்கின்றீர். யான் ஏது பிழை இயற்றியிருப்பினும் மன்னித்து முன்பொருநாள் அளித்ததுபோல இன்றைக்கும் எங்கட்குச் சில பிராணிகளைத் தருவீராகவும்" எனவேண்டி நெடுஞ்சாணை (சாஷ்டாங்கமாய்) யாய்க் கீழே விழுந்து தொழுதான்.

தனக்கு மூத்தவர் இவ்விதம் தன்னை வணங்குகின்றதைப் பொறுக்கமுடியாமல் அவ்வரசனைத்தூக்கி விட்டு அச்சமயத்திலேயே அவனுடைய காதில் ஒரு துளையிட்டு விட்டான். தன் காதில் துளையிடப்பட்டது அரசனுக்குத் தெரியவில்லை. அவள் தெய்வமே தன்னை இவ்விதம் தூக்கி விடுகிறதென மகிழ்ந்து சங்குபாலக னுத்தரவைக் கேட்டு முன்னையைக் காட்டிலும் அதிகமான பிராணிகளைப்பிடித்துக்கொண்டு தன் நாடுபோய்ச்சேர்ந்தான். நம் பாலகனும் மானும் மயிலும் ஒவ்வொன்று பிடித்துக்கொண்டு தனது மனைவியிடம் போய்ச்சேர்ந்தான். பிறகு அம்மானைக் கொண்டுபோய் தந்தையினிடம் அளித்துவிட்டு வரும்படி அவளிடம் கூறினான்.

"நாயகா! தங்கள் கட்டளையை யான் மீறுவதாக எண்ணாதீர்கள். முந்திய தடவை யான் மயில்கொண்டு சென்றபொழுது என் தந்தை முதலானோர் என்னை அடித்துத் துரத்தினர். இப்பொழுதும் யான் அவ்விடம் செல்வேனானால் அவர்கள் என்னைக்கொன்று விடுவார்கள்" என்றாள் அவள். "அவ்விதமெனில் இத் தடவையிலும் நீ இம்மானைக்கொண்டுபோய் உனது தந்தையாரிடம் கொடு. அடிக்க வருவாரானால் "இம்மூட அறிவைப் படைத்திருந்ததனாலன்றோ என் கணவர் உமதுகாதில் குளத்தருகில் துளையிட்டு அனுப்பினார் எனக் கூறிவிட்டு வந்துவிடு" என்றான் சங்குபாலகன். அவள் அதற்கிசைந்து மானையெடுத்தேகினாள். அவளைக் கண்ட தந்தை "இங்கேன் வருகிறாய்" என்றுகூறி துடிப்பதற் கெழுந்தான். உடனே தனது கணவன் கூறியபடி கூறிவிட்டுவந்து விட்டாள். அவளுரைத்ததைக் கேட்ட மன்னன் திடுக்கிட்டு உடனே கண்ணாடியில் தனது காதைப் பார்க்க நிசமாகவே துளையிடப்பட் டிருந்தது. "நம்மேல் ஒருவருடைய கரங்களும் பட்டதில்லையே. நம்மையறியாமல் எவ்விதம் துளை உண்டாயிருக்கக்கூடும்?" என தனக்குள்ளே எண்ணி எண்ணிப் பார்த்தான். சிறிது வேளையில் தான் அடவியில் தெய்வமென்றெண்ணி ஒருவருக்கு விழுந்து கும்பிட்ட நினைவுவந்து, "அவன்தான் நம்மைத்தொட்டவன். துளையிட்டவனும் அவனாகத்தா னிருக்கவேண்டும். அவன்தான் நம் புதல்விகூறியபடி அவளுடைய கணவன்போலும்! அவன் நம்புதல்

விழை மணமுடித்தபோது சீழ்வடிந்த புண்களுடன் நாற்றமெடுத்து மிக்க நரகலாயிருந்தான். இப்பொழுது இவ்வளவு அழகுள்ளவனு யிருப்பதை ஆராய்ந்தால் ஏதோ மறைபொருளா யிருக்கிறது. நாம் முன்பு அறியாமலன்றோ அவனை இகழ்ந்து பேசினோம். இப்பொழுது அவனை நமதரமனைக்கு வரவழைத்துப் பார்க்கவேண்டும்'' என்றெண்ணிக்கொண்டு மந்திரியை யழைத்துத் தன் புதல்வியிருக்கும் பிள்ளையார் கோவிலுக்கும் தன்னரமனைக்கும் பூப்பந்தலிட்டுச் சிங்காரிக்கும்படி கட்டளையிட்டான். அவ்விதமே மந்திரியின் ஏவலினல் சிலர் பந்தலை வெகு அழகாகச் சிங்காரித்துக் கொண்டிருந்தனர்.

இவ்விதமிருக்க—தனது தோல் போர்வை மறையும் வரை "பிரமசரிய" விரதத்தை கைக்கொண்டுவர எண்ணி மனைவியினிடம் தான் ஒரு விரதம் நொண்டிருப்பதாகவும், விரதம் முடிந்தவுடன் எங்கும் ஓர் பட்டினத்திற்குச்சென்று பிழைக்கலாமெனவும், கூறியிருந்த நம் சங்குபாலகன், எப்பொழுதும் வழக்கம்போல, ஓர் நாளிரவில் ஆலயத்திற்குப் புறப்பட்டுச் சென்றான். இவன் நெடுநாளாக இவ்விதம்போய்வருவதை யறிந்திருந்த அவனுடைய மனைவி அன்றைக்கு இவர் செல்வது எங்கெனக்கண்டுபிடிக்க எண்ணி, அவனுடன் தொடர்ந்து பின்னாலேயே சென்றாள். அவன் ஆலயத்தில் நுழைந்து ஒன்றன் தோலைக்கழற்றி அங்கிருந்த அடைப்பின் (வேலியின்) மேல் போட்டுவிட்டு வழக்கம்போலப் பூசை செய்துக்கொண்டிருந்தான். இவற்றையெல்லாம் பார்த்திருந்த அவன்மனைவி அவனை யறியாமல் அவ்வோணன் தோலை எடுத்துக்கொண்டுவந்து அதை நெருப்பிலிட்டுச் சாம்பலாக்கிவிட்டாள்.

7-ம் அத்தியாயம் முற்றிற்று.

(தொடரும்)

அ. ச. அருணசல ரெட்டியார்,
அம்மாபாளையம், பெரம்பலூர் தாலுக்கா, திருச்சி.

---

## மிருகாவதி

## VIII

(318-ம் பக்கத் தொடர்ச்சி.)

கிருஷ்ண பக்ஷமென்றால் இருட்டு நாட்கள் பதினைந்து. அப்படியே சுக்லபக்ஷமென்றால் நிலா நாட்கள் பதினைந்து. ஆக நாட்கள் முப்பது கொண்டது மாதமொன்று இவ்வாறு முப்பது நாட்களுக்குந் துன்பசாத்ருச்யமாம் இருட்டும், இன்ப சாத்ருச்யமாம் நிலவும்மாறி வருவனபோல் மானிடருக்கு துக்கம் சுகம் மாறிமாறி வந்துகொண்டிருக்கின்றன. அயோத்தியாபுரியில் கிருதவர்மனுடைய

மாளிகையில் முதல் நாள் அழுகையும், குழப்பமுமா யிருந்தவர்கள் மறுநாள் சந்தோஷமும் மங்களகரமுமாய் மாறினர். எவ்வாறெனில் பிலத்தில் புகுந்து "நந்தனஞ்சென்று அதன் விநோத விசித்திரங் களையெல்லாங்கண்டு களிப்பெய்திய நங்கையர்கள் மீண்டும் அன்றே பிற்பகல் நேரத்திற்குள் தங்கள் கன்னியாமாடத்தி லிருக்கக்கண்டு வியந்தனர். தாதியாகள் ஓடோடியும்போய் அரசி அரசன் அமைச் சன் முதலாயினேரிடம் மங்களகரமாய் கன்னியர்களின் நல்வரவை யுரைக்கலாயினர். ரமணீமணிகளைக் காணுது வருந்தி விசாரசாகரத் தின் மூழ்கிக்கிடந்த தந்தையர்கள் மனங்குளிர்ந்து "அன்பே அரு ளே இன்பே கனியே இன்னமுதே யுங்கள் திருமுகத்தை மீண்டுங் காணப்பெற்றேமே" யென அகங் குளிர்ச்சியடைந்து உடனே அன் னவர்களை யழைப்பித்து, கண்கள்குளிரப்பார்த்து, அங்கங்குளிரக் கட்டி முத்தந்தந்து உச்சிமோந்து,

"நீருமிழு நிலம்பொதியும் நெற்கட்டும்
பேரும் புகழும் பெருவாழ்வு—மூரும்
வருந்திருவும் வாழ்நாளும் வஞ்சமில்லார்க் கென்றுந்
தருஞ்சிவந்த தாமரையா டாள்"

என்றபடி எல்லாங் கடவுள் செயலாகுமென வியந்து ஆனந்த பாஷ்பம் பெருக்கினர். மங்கையர்களும் விண்ணிலுள்ள நந்தனம் புக்கி, மீண்டும் அரண்மனைவந்து சேர்ந்தவரையில் நிகழ்ந்த வரலா றனைத்தையும் சொல்லக்கேட்டு அகமகிழ்வெய்தினர். தேவாலயங் களிலும் திருக்குளங்களிலும் மாடமாளிகை கூடகோபுரங்களிலும் எங்கும் அன்றிரவில் லக்ஷக்கணக்காய் விசேஷதீபங்கள் ஏற்றியும் சுவாமிக்கும் அம்மானுக்கும் விசேஷமான அர்ச்சனைகளைப் புரிந்தும் தருமசாலைகளில் பிராம்ஹண போஜனுதிகள் பூரி தக்ஷிணைகள் கொடுத்தும் நிருத்த சாலைகளில் அப்ஸரோபம தாஸிமணிகளைக் கொண்டு நிருத்தம் கீதம் முதலான வேடிக்கை விநோதங்களைச் செய் வித்தும் உச்சவங்கொண்டாடலாயிற்று இராஜ கன்னிகைகளாம் ரமணீமணிகளின் பருவவயதைப் பார்த்துத் திருமணமுடிக்க யுத்த னஞ் செய்யலாயினர். அப்பொழுது அந்த அயோத்திமா நகரே மிகுந்த குதூகலமாயிருந்தது.

## IX

"அவரன்புக்கோ ரளவில்லை, அருளுக்கோர் குறைவில்லை"

யென்று சொல்லுப்படி அன்பும் அருளும் அவரிடத்து நிறைந்து விளங்கியது. அப்படிப்பட்ட புருஷ சிரேஷ்டரான அவரை திடீ ரென்று விட்டுப்பிரிந்து வந்தது முதலா யென்மனமிருள்மூடிப் பரத விக்கின்றதே! ஐயோ!! அவருடைய உருவத்தை ஹிருதயத்தில் பதித்துவைத்ததன்றி அவர் படத்தை ஆபரணமாயெழுதி என் கை யில் தரித்தும், நான் சயனிக்கும் கட்டில் முகப்பில் அவருடைய

படத்தைப் பதிப்பித்துத்தினம் நித்திரைக்குப் போகும்பொழுதும், நித்திரைவிட்டெழுந்திருக்கும் பொழுதும் அவர் ஞாபகமே ஞாபகமாக அவருருவத்தை யகத்தும் புறத்தும் வைத்துத் தியானித்து வருகின்றேனே அம்மகானுபாவராகிய திவ்ய புருஷருடைய தியானத்தினால் நித்திரையுமில்லையே. அடிதோழிகாள், நான் என்ன செய்வேனோ ?

“ பணந்தா ழரவுண்டு மிழ்மதியே யமிழ்தினோடும் பலதேவ
கணந்தாம வெருவு விடத்தொடும் வந்தனை யன்றோ கணவர்புய
மணந்தா ருள்ளங் குளிரப்பெற தண்ணென் கதிர்கள் வழங்குவதுந்
தணந்தா ருள்ள மிகவெதும்பத் தழல்போ லுருக்குந் தன்மையாமே”

தாழ்ந்த படத்தினையுடைய இராகுவென்னும் பாம்பினால் விழுங்கி கக்கப்படுகின்ற சந்திரனே ! நீ பல தேவர்களும் விரும்பத் தகுந்த அமிர்தத்துடனும் தேவர்கள் பயந்து ஓடுதற்குரிய விஷத்தினோடும் திருப்பாற் கடலிற் பிறந்ததினால் நாயகர்களோடு கூடியிருக்கின்ற பெண்களுக்கு குளிர்ச்சியைத் தருகின்ற சுபாவமும் நாயகர்களைப் பிரிந்திருக்கின்ற ஸ்திரீகளுக்கு உஷ்ணகிரணத்தைவீசும் சுபாவமும் உடைத்தாயிருக்கின்றாய். உன்னை மாதத்தில் ஓரேநாள் பூர்ணகலையுடன் இருக்கச்செய்த கெர்வமென்றோ என்னைவாட்டுகின்றாய், இவ்வுப்பரிகையைச் சுற்றிலும் படர்ந்திருக்கும் முல்லை மல்லிகைமுதலான நறுமலர்களின் மணம் வீசியும் பயன் தந்திலதே, ஜனங்களுக் கனுகூலமாயிருக்கும் எல்லாம் எனக்குபிரதிகூலமாயிருக்கின்றனவே, ஐயோ, சுந்தரனே ! நீ மாத்திர மென்னிட மிருப்பாயேல் இக்கொடுமையில்லாது மனங்களிக்கலாகுமே ! மாரன் கணை டஞ்சுவேனே !

வெண்மலர் மாளிகை யிருந்து வேதமாம்
பண்மலர் மொழிபுகல் பவள வாயினள்
தண்மலர் கொண்டடி கார்ப்ப வர்க்கருட்
கண்மலர் பூங்கொடி கழல்கள் போற்றுவாம்

ஏ ! பரதேவதையே ! என் நாதனை ஓர் விபத்துமணுகாது காத்து, நாளையுதயத்திலிங்குகொண்டுவிடவேண்டுகின்றேன், உனது கிருபையன்றோ எனது எண்ணப்படி அவரை நந்தனத்தில் காணச் செய்தது; மற்றைய காரியங்களையும் நீயேயல்லவோ முடித்து என்னை ரக்ஷிக்கவேண்டும் உன்னையே தஞ்சமென நம்பியிருக்கின்றேன்” என்று பலவிதமாய்ப் புலம்பியு மழுதும் உறக்கமில்லாமல் தன் பஞ்சணையில் புரண்டும் துடித்துக்கொண்டிருந்தாள் மிருகாவதி.

கமலாட்சியோ, “ அடியே, தோழி மிருகா ! என்ன அந்யாயம் பாரடி! வில்லனுக்கு* வில்லோ புஷ்பம். வில்லின் நாரியோ வண்டின் கோர்வை; பாணமோ கடைக் கண்ணோக்கம்; (துணைவனோ) தனி ;

* வில்லன் : மன்மதன்.

உருவிலன் இந்த ஸ்திதியில் அவன் திரிபுவனங்களையும் கலக்குகின்றனன். பேதையர்களான நம்மை எரித்து வாட்டி வருத்துதல் எளிதேயன்றோ!'' என்றனள்.

"அவனுக்குத் துணைவர்கள் யார் தெரியுமோ மந்தமாருதமுங் குயிலுமாம்'' என்றாள் கலாவதி.

"சரிதான் பூர்ண சந்திரன், குயில், இளங்காற்றுங் கூடினால் காதலரைப்பிரிந்த ஆண் பெண்பாலாரது பாடு திண்டாட்டமேதான்'' என்றனள் ரூபாவதி.

"இவ்வாறு தம் தம் நாயகர்களைக் கட்டிக்களிக்கும் நாள் என்றோ'' வென்று ரமணிமணிகள் நால்வரும் வருந்தலாயினர்.

(தொடரும்) துறையூர் மா. சுப்பராமய்யர்.

---

## ஜீவகாருண்யம்

ஜீவன் காருண்யம் ஜீவகாருண்யம்.

ஜீவன்-உயிர், காருண்யம்-கிருபை அதாவது உயிர் உள்ளபிராணிகளிடத்தில் கிருபையோடு இருக்கவேண்டும் என்பது பொருள்.

மானிடராகப் பிறந்த நாம் ஜீவகாருண்யம் இல்லாமல் இருந்தால் யாதுபயன். ஒரு மிருகத்துக்கோ அல்லது வேறு ஒரு பிராணிக்கோ ஆபத்து வந்துவிட்டால் அதை நம்முடையதாகப்பாவித்து அதை எவ்வளவு நம்மால் தடுக்கக்கூடுமோ அவ்வளவு தடுக்கவேண்டும். அப்படி அதுவும் முடியாவிட்டால் ஐயோ பாவம் வருத்தப் படுகிறதே என்று மனதில் இரக்கங்கொள்ளவேண்டும். அப்படி இரக்கங்கொள்ளாமலிருந்தால் நாம் கஷ்டப்படும்பொழுது ஒருவரும் இரக்கப்படமாட்டார்கள்.

ஒரு மாடானது பாரத்தை இழுக்கமுடியாது என்று கண்ட பின், பின்னும் அதைவற்புறுத்துவதால் யாது பயன். அப்படி எத்தனையோ மனிதர்கள் மாட்டை அடித்து கஷ்டப்படுத்துகிறார்கள். அந்தோ இது எவ்வளவு பரிதபிக்கத் தகுந்த விஷயம். மாட்டை விலைக்கு வாங்கிவிட்டால் தனக்குத்தான் சர்வ அதிகாரமும் இருக்கிறது என்று மாட்டை கஷ்டப்படுத்தப்படாது. அதுவும் நம்மைப் போல ஒரு பிராணிதான்.

தெருவில் ஒரு நாய் சென்றால் எத்தனை குழந்தைகள் கல்லை விட்டு எறிகின்றார்கள் கல்லைக்கொண்டு எறிந்தால் வலிக்குமே என்ற ஞானம் உண்டாகிறது இல்லை. இத்தொழிலை அநேக குழந்தைகள் முக்கிய வழக்கங்களில் ஒன்றாகவைத்துக்கொண்டு இருக்கிறார்கள். இப்படிச்செய்வதால் சீவகாருண்யம் எப்படி உண்டாகும். எத்தனையோ மனிதர்கள் ஆடு, மாடு கோழி முதலியவைகளைக்குழந்தைகளைப்போல் வளர்த்து பலிகொடுக்கிறார்கள். அப்படிபலி இடுவ

தால் பாவம் உண்டாகுமே ஒழிய புண்ணியம் உண்டாகப்போகிறது கிடையாது நம் இந்தியாவானது எவ்வளவோ நாகரீகம் அடைந்து இருந்துங்கூட இந்தபலி இடும் வழக்கம் இன்னும் நின்றபாடில்லை.

கொல்லான் கொலைபுரியான் பொய்யான் பிறர்பொருள்மேல்
செல்லான், சிறியார் இனஞ்சேரான்—பல்லார்
மறையிற் செவியிலன், தீச்சொற்கண் மூங்கை
இறையிற் பெரியார்க் கிறை.

என்று சொல்லப்பட்டு இருக்கிறது. எவனொருவன் மாமிசம் தின்பதை இடையில் விட்டுவிட்டால் எல்லா உயிர்களும் கைகூப்பித்தொழும் என்றும் சொல்லப்பட்டு இருக்கிறது.

கண்ணப்ப நாயனர் மிருகங்களைக் கொன்று சிவனுக்கு ஊட்டினர். அவருக்கு ஏன் முத்திகிடைப்பானேன் என்று கேட்பீர்கள் ஆனல் அவர் கடவுளிடத்தில் மனதார முழு அன்புவைத்து சிவன் கண்ணினின்றும் இரத்தம் வந்தபொழுது ஒரு பொருட்பண்ணமல் தன் கண்கள் இரண்டையும் எடுத்துவைத்தார். அவ்வளவு பக்தி இருந்ததினல்தான் அவருக்கு முத்திகிடைத்தது.

எவரேனும் ஒருவர் கஷ்டப்பட்டால் அதை நம்முடையதாக பாவித்து தானுங் கஷ்டப்படவேண்டும். ஒருவன் நமக்கு எந்தவிதமான தீங்கு செய்தாலும் பதிலுக்குப் பதில்செய்யவே கூடாது. பிறருடைய மனம் புண்ணுகும்படி கஷ்டப்படுத்தக்கூடாது எப்படிப்பட்ட தாழ்ந்த பிராணியாய் இருந்தாலுங்கூட அலட்சியம் செய்யாமல் உதவி செய்யவேண்டும்.

உலகத்தில் படைத்த எல்லா வஸ்துக்களும் மனிதனுக்கென்றே படைத்திருப்பதாகவும் அதனல் ஆடுமாடுகளைக்கொன்றால் பாவம் இல்லை என்றும் நினைக்கிறார்கள். அது மிகவும் சுத்தப்பொய் எவ்வஸ்துக்களையும் மனிதனுக்கென்றே படைத்தால் அவைகளைக் கண்டு ஆனந்திக்கும்படி படைத்தாரேயொழிய அவைகளை அழிக்கும்படி படைக்கவில்லை. கசாப்கடைக்காரனிடம் ஒருவன் போய் ஐயா அனுதினமும் 5, 6, உயிர்களை கொல்கின்றீர்களே அது உங்களுக்குப் பாவம் இல்லையா என்றுகேட்டால், அதற்கு அவன், அந்தப்பாவம் எனக்கல்ல. அதை தின்பவர்க்கே என்றுகூறினன் ஏன் என்று கேட்டதற்கு, அவன், உங்களுக்காகத்தானே நான் ஆட்டை வெட்டுகிறேன். நீங்கள் தின்னமல் இருந்தால் நான் ஏன் ஆட்டை வெட்டுகிறேன் என்று மறுமொழி கூறினன்.

ஊன் ஊனை ஏற்காது. ஒருகாலும் மனிதனை மட்டும் சந்தோஷமடையும்படிச் செய்யமாட்டார். எல்லா உயிர்களையும் தன்னுடைய உயிராகப் பாவிக்கவேண்டும்.

ஆகையால் நாமும் நம்மால் இயன்றமட்டில், கடவுள்கொடுத்த அற்ப ஆயுளில் ஜீவகாருண்யத்தைச்செய்து கடவுளின் பொற்பதத்தை அடைவோமாக. சுபம்! சுபம்!! சுபம்!!!

## தருமம்

தருமம் என்பது ஈகை என்று பொருள். இப்பூவுலகின்கண் சிருஷ்டிக்கப்பட்ட எல்லா ஜீவராசிகளிலும் மானிடப்பிறவியே மிகச் சிறந்ததென்பது யாவருக்கும் தெரிந்த விஷயம். இம்மானிடருக்கு தருமமே முக்கியமானது. இந்தியாவில் தருமம் மட்டென்றே சொல்லலாம்.

ஒரு பிச்சைக்காரன், ஐயா வயிற்றுக்கு ஒன்றும் இல்லை. சாப்பிட்டு இரண்டு நாட்களாய்விட்டது. வயிறு பசி எடுக்கிறது, இன்னும் 12 மைல் நடக்கவேண்டும் என்று ஒருவன் பிச்சைகேட்டால் அதற்கு அவ்வீட்டுக்காரன், பிச்சையும் இல்லை கிச்சையும் இல்லை, என் இவ்வளவு திடகாத்திரமான தேகத்தை வைத்துக்கொண்டு சும்மா இருக்கிறாய்? எங்கேயாவது போய் வேலைசெய்கிறதுதானே, உனக்கென்ன கொள்ளை என்று வைது துரத்துகிறார்கள். அந்தோ இவர்களுடைய மூடச்செய்கையை என்னவென்றுரைப்பது. அதனால் அல்லவோ நம் இந்தியாவானது அவ்வளவு கேவல நிலைமையில் இருக்கிறது. நாம் எவ்ரைக்கண்டாலும் நம்முடைய சினேகிதராகப் பாவிக்கவேண்டும்.

இக்காலத்தில் நாம் தருமம் செய்தால் பிற்காலத்தில் கஷ்டப் படாமல் க்ஷேமமாய் இருக்கலாம். அப்படிக்கில்லாமல்

"செய்தவினை இருக்க தெய்வத்தை நொந்தக்கால்
எய்த வருமோ இருநிதியம்—வையத்து
அறும்பாவம் அன்றிடாருக் கின்று
வெறும்பானை பொங்குமோ மேல்" என்றபடி முற்காலத்தில் தருமம் செய்தவர்கள் இக்காலத்தில் தனவந்தராய் இருக்கிறார்கள். என்பதை நாம் கண்கூடாகக்கண்ட விஷயமே. ஒவ்வொருவரும் தம்மால் இயன்றளவு தருமத்தைச் செய்யவேண்டும். "தருமமே தலை காக்கும்." ஒரு பிச்சைக்காரன் பிச்சை கேட்கும்பொழுது உணவு இல்லாவிட்டால் நல்லவார்த்தை சொல்லி அனுப்பவேண்டும். ஒரு பிச்சைக்காரன், "ஐயா வயிறு பசிக்கிறது சாதம்போடுங்கள்" என்று கேட்கும்பொழுது ஆடைகொடுப்பதும், ஆடை இல்லை என்று கேட்கும்பொழுது உணவு அளிப்பதும் கூடாது. அவன் எதைக்கேட்கிறானோ அது இருந்தால் கொடுக்கவேண்டும்.

தருமம் செய்வது உண்மையான முழுமனதோடு தருமம் செய்ய வேண்டும். ஆடம்பரத்துக்காவது, இரக்கமில்லாமலாவது தருமம் செய்தால், அது தருமமாக ஒப்புக்கொள்ளபடமாட்டாது. அதனால் யாதொரு பிரயோஜனமும் இல்லை.

தருமம் செய்வதில் ஜாதி வித்தியாசம் பார்க்கக்கூடாது. பிரதி உபகாரத்தை உத்தேசித்து செய்யும் தருமம் தருமமாகமாட்டாது.

"ஈவது விலக்கேல்" ஒருவன் ஒருவனுக்கு தருமம் செய்யும் பொழுது நாம் தடுக்கக்கூடாது. "அறஞ்செயவிரும்பு" ஒவ்வொருவரும் தருமம் செய்யப்பிரயாசைப்படவேண்டும். உண்மையாகவே தருமம் செய்து முத்தியடைந்த ஒருவருடைய சரித்திரத்தை கூறுவோம். சில வருடங்களுக்குமுன் இளையான்குடி என்ற ஊரில் வேளாளவருணத்திலேபிறந்த மாறனர் என்பவர் ஒருவர் இருநதார். அவருக்கு இளையான்குடிமாற நாயனர் என்றபெயரும் உண்டு. அவரும் அவருடைய மனைவியும் ஒருமைப்பட்டு தருமத்தையே செய்து வந்தார்கள். ஒரு நாளாயினும் பிச்சையிடாமல் இருந்ததில்லை. அப்படி பிச்சைக்காரர்கள் வராவிட்டால் அவர்களைத்தேடி கூட்டிக்கொண்டு வந்து பிச்சையிடுவது வழக்கம்.

சில காலத்திற்குள் ஏழையாய் விட்டார்கள். சாப்பிடுவதற்கும் கூட உணவு இல்லாமல் போய்விட்டது. அப்படியிருந்தும் அவர்கள் தருமத்தை விட்டபாடில்லை.

இவர்கள் உண்மையாகவே தருமம் செய்கிருர்களா? என்று சோதிப்பதற்கு ஒரு நாள் பகலில் இருட்டை ஏற்படுத்தி ஓயாமல் மழைபெய்யும்படியாகச் செய்துவிட்டார். அன்று முழுவதும் ஒரு சந்நியாசிகூட வராமையால் மிகவும் வாட்டமுற்று இருந்தனர். அப்பொழுது கடவுள் கிழரூபங்கொண்டு கதவைத்தட்டினார். உடனே கதவைத்திறந்து வந்தகிழவரை அழைத்துவந்து ஆசனத்தில் இருக்கச்செய்தனர். அன்றுதான் வீட்டிலிருந்த நெல்லை வயலில் விதைத்து விட்டுவந்து இருந்தார்கள். நாயனர் ஒரு கூடையை எடுத்துக்கொண்டுபோய் வயலில் தெளித்த நெல்லை பொறுக்கிக்கொண்டுவந்து உலர்த்தி இடித்து அரிசியாக்கினர்கள். விறகு இல்லாமல் கூறையைப்பிடுங்கி அடுப்பெரித்தார்கள் தழைகளைப் பிடுங்கி கறிசமைத்தார்கள், இலைபோட்டு பரிமாரவும் மறைந்துவிட்டார். அன்றுமுதல் கடவுளிடத்தில் பித்துப் பிடித்துவிட்டது, பிறகு கடவுள் முத்திதந்தார் என்பது கதை. ஆகையால் நாமும் அவர்களைப்போல் நம்மால் இயன்றமட்டும் தருமம் செய்து முத்தியடைய ஆண்டவன் அருள்புரிவாராக. பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

அ. சோமசுந்தரம், வத்தலக்குண்டு.

---


## மணவாழ்க்கை மர்மம்

இல்லற இன்பத்தை எளிதிலுணரச்செய்து இகபோகசாதனத்தை யளிக்கவல்லது இதுவே யாகும்.

விலை அணு 8.

விலாசம்: இரஞ்சித போதினி ஆபீஸ்,
சௌகார்பேட்டை, சென்னை.

# இரஞ்சித போதினியின் இரக்தாக்ஷி வருஷத்திய
# திருக்கணித சர்வ முகூர்த்தப் பஞ்சாங்கம்

கலியுகாதி 5026—சாலிவாகனம் 1847—பசலி 1333—ஹிஜரி 1342

கொல்லமாண்டு 1099-1100—இங்கிலீஷ் 1924ஹு

| கார்த்திகை | நவம்பர் டிசம்பர் | வாரம். | திதி | நக்ஷத்திரம் | அமிர்தாதி யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 16 | ஞாயி | பஞ் 59.28 | புன 60.0 | சித் 60 | கரிநாள் |
| 2 | 17 | திங் | சஷ் 60.0 | புன 7.38 | அ7.38சி | ஷஷ்டிதிதிவிரதம் |
| 3 | 18 | செ | சஷ் 5.25 | பூச 14.35 | சித் 60 | அனுஷா கார்த்திகை |
| 4 | 19 | புத | சப் 10.18 | ஆயி 20.33 | சித் 60 | கிருஷ்ணஷ்டமி |
| 5 | 20 | வி | அஷ்13.30 | மக 24.45 | அ24. 45சி | கதிரறுக்க |
| 6 | 21 | வெ | நவ 14.45 | பூர 27.0 | சித் 60 | சித்திரம் எழுத |
| 7 | 22 | சனி | தச 13.40 | உத் 27.5 | மர 60 | தனுராயனம் 32.33 |
| 8 | 23 | ஞாயி | ஏ 10.28 | அஸ் 25.0 | அ 25.0 சி | மத்வ சர்வ, ஏகாதசி |
| 9 | 24 | திங் | து 5.10 திர 53.30 | சித் 20.58 | பி 20.58அ | பிரதோஷம் |
| 10 | 25 | செ | சது50.10 | சுவா15.23 | சி 15.23 ம | கரிநாள் |
| 11 | 26 | புத | ● 41.10 | விசா 8.40 | சித் 60 | அமாவாசை |
| 12 | 27 | வி | பிர 31.45 | அறு 1.23 கே 53.55 | சித் 1.23பி | நாலுகால் ஜீவன் கொள்ள |
| 13 | 28 | வெ | துதி 22.30 | மூல46. 43 | அ46.43 பி | |
| 14 | 29 | சனி | திரி 13.55 | பூரா 40.20 | சித் 60 | புதுகணக்குபோட |
| 15 | 30 | ஞாயி | சது 6.18 பஞ் 59.58 | உத் 35.3 | அமி 60 | சீமந்தம் |
| 16 | 1 | திங் | சஷ் 55.10 | திரு 31.15 | அ31.15 சி | ஷஷ்டி திதி |
| 17 | 2 | செ | சப் 51.58 | அவி 29.0 | சித்29.0 ம | கரிநாள், மித்ர சப்தமி |
| 18 | 3 | புத | அ 50.33 | சத 28.30 | சி28.30 அ | |
| 19 | 4 | வி | நவ 50.40 | பூர 29.38 | சித் 60, | |
| 20 | 5 | வெ | தச 52.18 | உத் 32.13 | சி 32.13அ | விவாகம் சீமந்தம் |
| 21 | 6 | சனி | ஏகா 55.10 | ரே 36.5 | மர 36.5 சி | சர்வத்ர யேகாதசி |
| 22 | 7 | ஞாயி | து 4.13 | அசு 40.58 | சித் 60 | மச்சதுவாதசி |
| 23 | 8 | திங் | திர 60.0 | பர 46.48 | சி 86.48 ம | பிரதோஷம் |
| 24 | 9 | செ | திர 3,30 | ✻கி 53.23 | சி 53.23அ | கிருத்திகை அருணசல தீபம் |
| 25 | 10 | புத | ச 9.23 ○ | ரோ 60.0 | சித் 60 | பௌர்ணமி விஷ்ணு தீபம் |
| 26 | 11 | வி | பவு 15.20 | ரோ 0.13 | மர 60 | |
| 27 | 12 | வெ | பிர 21.48 | மிரு 7.35 | சித்60 | [வைக்க |
| 28 | 13 | சனி | துதி 28.25 | திரு 15.15 | சித்60 | தானியம் களஞ்சியத்தில் |
| 29 | 14 | ஞாயி | திரி 34.55 | புன 22.50 | சித்60 | மூலாகார்த்திகை |